விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 26 சனிக்கிழமை (10.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து



உண்ணாவிரதத்தில் அமைச்சர் விமல் வீரவன்ச

## வீரவன்சவின் உடல்நிலை மோசம் மருத்துவர்கள் அபாய எச்சரிக்கை!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆலோசனைக் குழுவைக் கலைக்குமாறு வலியுறுத்தி உண்ணாநிலைப் போராட்டத்தை நடத்தி வரும் விமல் வீரவன்சவின் உடல் நிலை குறித்து மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விமல் வீரவன்சவின் உண்ணாநிலைப் போராட்டம் இரண்டாவது தினமாகவும் நேற்று தொடர்ந்தது.

இந் நிலையில் வீரவன்சவின்உடல் நிலை கவலைக்கிடமாக அமைந்துள்ளதென மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாகச் சிங்கள இணையமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நீர் அருந்தாத காரணத்தினால் சிறுநீரகத்திற்குப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விசேட நிபுணத்துவ (18 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நாவுக்கு எதிரான அரசின் செயலுக்கு சர்வதேச நாடுகள் கடும் கண்டனம்!

## 10 நாடுகள் கூட்டாக அறிக்கை

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிரான போராட்டத்திற்கு எதிராக இலங்கையில் இயங்குகின்ற பத்து இராஜாங்க செயலகங்கள் கண்டனம் வெளியிட்டன. இது தொடர்பில் கொழும்பில் உள்ள ஜேர்மன், பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, சுவிட்சர்லாந்து, ரோமானியா, நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் இராஜதந்திரக்காரியாலயங்கள் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.** (18 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் கொடும்பாவி எரிப்பு ஐ.நா. சபைச் செயலரோ புன்சிரிப்பு

### இன்னர் சிற்றி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் கொடும்பாவி எரிக்கப்பட்டிருக்கும் நிலையில் அது தொடர்பாக அவர் என்ன செய்யப் போகின்றார் என்று இன்னர் சிற்றிப் பிரஸ் அவரிடம் கேட்டது.

பான் கீ மூன் புன்முறுவல் பூத்தார். அவரின் இணைப் பேச்சாளர் குறுக்கிட்டு செயலாளர் நாயகம் பொருத்தமான தருணத்தில் பேசுவார் என்று கூறினார். இலங்கையில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் கொடுப்பாவி எரிக்கப்பட்டிருக்கும் நிலையில் அது தொடர்பாக அவர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

அதேசமயம் அரசாங்கத்துடன் பேச வேண்டும் என்று (18 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் டி.எம்.ஜயரட்ண இன்று வன்னிக்கு விஜயம்

(கொழும்பு)

பிரதமர் டி.எம்.ஜயரட்ண இன்று வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போர் காரணமாக அழிவடைந்த சர்வமத வழிபாட்டுத் தலங்களைப் புனரமைக்கும் விசேட திட்டமொன்றும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.


அற வழியிலான சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள பல அபிவிருத்தித் திட்டங்களைப் பிரதமர் டி. எம்.ஜயரட்ண ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

யுத்தத்தினால் அழிவடைந்த பிரதே (18 ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியின் சொத்துக்களை பயன்படுத்தி சம்பள அதிகரிப்பினைச் செய்ய முடியும்

### ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனின் சொத்துக்களுக்கு என்ன நேர்ந்ததென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

குமரன் பத்மநாதனின் கப்பல்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பான தகவல்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என அவர் கோரியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

குமரன் பத்மநாதனுக்குச் சொந்தமான 18 கப்பல்களுக்கு என்ன நேர்ந்ததென அறிந்து கொள்ள விரும்புகின்றோம். 500 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் குமரன் பத்மநாதனுக்குச் சொந்தமாகக் காணப்பட்டது. அவற்றுக்கு என்ன வாயிற்று? (18 ஆம் பக்கம் பார்க்க)



## வீரவன்ச ராஜினாமாக் கடிதம்; ஜனாதிபதி மகிந்த ஏற்க மறுப்பு

### உண்ணாவிரதம் தொடர்கின்றது

(கொழும்பு)

வீடமைப்பு மற்றும் பொறியியல் அமைச்சர் விமல் வீரவன்சவினால் சமர்ப்பிக்கப்பட்ட ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்க மறுத்துள்ளார்.

தமது உண்ணாவிரதப் போராட்டத்தினால் அரசாங்கத்திற்கு நெருக்கடியான நிலை ஏற்படக் கூடும் என்ற காரணத்தினால் தமது பதவியை ராஜினாமாச் செய்யத் தீர்மானித்ததாக விமல் வீரவன்ச ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

எனினும் குறித்த ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ் ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளதாக (18 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி செயலணியின் அனுமதிக்காக காத்திருக்கும் உதவித் திட்டங்கள்!

### மீள்குடியேறியோர் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை அமைத்துக் கொடுப்பதற்கு தயாராகவுள்ள உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஜனாதிபதி செயலணியின் அனுமதிக்காகக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு வாழ்வாதார உதவிகள், வீட்டுத் திட்டங்கள் மற்றும் சமூகத் திட்ட உதவிகளை வழங்குவதற்கு உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் தயார் நிலையில் உள்ளன. இவ் உதவித் திட்டங்களுக்கான (18 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு யாழ்.குடாநாட்டில் பாரிய அபிவிருத்தி

## யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டை அபிவிருத்தி செய்வதற்காக 1981ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டமானது கடந்த கால சூழ்நிலைகளால் மேற்கொள்ளப்படாமல் இருந்தது.

ஆனால் இனிவரும் 20 ஆண்டுகளுக்குள் பூர்த்தியடையும் வகையில் நவீன தொழில்நுட்ப முறையில் யாழ். நகரை அமைப்பதற்கு பாரிய அபிவிருத்தித்திட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இவ் பாரிய அபிவிருத்தித்திட்டத்திற்காக 3 ஆயிரத்து 789 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் முதல்வர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

இவ் அபிவிருத்தித்திட்டத்துக்கு அமைவாக யாழ்.மாநகரம், கோட்டையை சூழவுள்ள பகுதி கரையோரத்தை அண்டிய பகுதி, யாழ்.வர்த்தக நிலைய பகுதி, புகையிரநிலையமும் அதனை அண்டிய பகுதி என 4 வலயங்களாக பிரிக்கப்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

கோட்டையை அண்டிய வலயத்திலுள்ள துரையப்பா விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்தல், புல்லுக்குளத்துக்கு அருகாமையில் கலாசார மண்டபம் அமைத்தல், இவ் இரண்டு அபிவிருத்தித் திட்டத்திற்கும் இந்திய அரசாங்கத்தின் நிதியை பெறுவதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் வலயத்தில் புல்லுக்குளத்தை சூழவுள்ள பகுதிகளை அழகு படுத்தல், புதிய மாநகர சபை கட்டிடத்தை அமைத்தல் போன்ற அபிவிருத்தித் திட்டமும் இதில் அடங்கும்.

கரையோரத்தை சூழவுள்ள வலயத்தில் குறைந்த வருமானங்களை உடையவர்களுக்கு, வீடு இல்லாத பிரச்சினையை தீர்ப்பதற்கு தொடர் மாடிக்கட்டிடங்களை அமைத்துக் கொடுத்தல், நாவாந்துறையை சூழவுள்ள பகுதியில் அரச காணிகளில் சிறைச்சாலை அமைத்தல், குடாநாட்டில் புனரமைக்கப்படாத வீடுகளை புனரமைத்துக் கொடுத்தல் ஆகியவை இவற்றில் அடக்கப்படவுள்ளது.

யாழ். வர்த்தக நிலையப்பகுதியில் வண்ணாங்குளம் அபிவிருத்தி செய்து அதற்குமேலாக பாலம் அமைத்தல், சந்தை தொகுதி அமைத்தல் பொதுவானதும் தனியாரதும் போக்குவரத்துச் சேவைக்கான நிலையம் அமைத்தல், மூன்றாம் தொகுதிக்கான நவீன சந்தைக் கட்டிடத் தொகுதி அமைத்தல், வாகன தரிப்பிடங்களை அபிவிருத்தி செய்தல் என்பன இப்பகுதியில் உள்ளடக்கப்படுகின்றன.

புகையிரத நிலையத்தை சூழவுள்ள அபிவிருத்தித் திட்டத்தில் குடாநாட்டின் புகையிரதப் போக்குவரத்துக்காக அதை சூழவுள்ள பகுதியை அபிவிருத்தி செய்வதோடு புகையிரத நிலைய உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகளை அமைத்துக் கொடுத்தல் ஆகியவை உள்ளடக்கப்படுகிறது.

இந்த குடாநாட்டு அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக விளக்கமளிப்பதற்காக புவியியல் தகவல் தொடர்பு நிலையப்பணிப்பாளர் எல்.எச்.இந்திரசிறி, இலங்கை நகர அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சிறிவர்த்தன, உதவித்திட்டமிடல் குழுவின் உதவி பணிப்பாளர் பந்துசேன, வடக்குக் கிழக்கு அபிவிருத்தித்திட்ட பணிப் பாளர் ஆர்.எம்.ஆரியதாஸன், செயற் திட்டத்துக்கான உதவிப் பணிப்பாளர் மகிந்த விதானராட்சி ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து நேற்று யாழ்.மாநகர சபையில் இது தொடர்பான விளக்கத்தை வழங்கி ஆராய்ந்துள்ளனர்.

இவர்களால் சமர்பிக்கப்பட்ட வரைப்படத்திட்டத்தில் திருத்தப்பிரேரணைகளும் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக அமைக்கப்படவுள்ள யாழ்.கலாசார மண்டபத்தில் திராவிட கட்டிடக்கலையை பிரதிப்பலிக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும் என கூட்டத்தில் கலந்து கொண்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைவாக, இத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இக் கலந்தாய்வுக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ். பிராந்தியஉள்ளூராட்சிஉதவிஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், பிரதேச செயலாளர் கள், வர்த்தகசங்க பிரதிநிதிகள், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பாடசாலை அதிபர்கள், சமூக ஆர்வலர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டுதமது கருத்துக்களை வழங்கினர். (ச-6,7)

## இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

ஊர்காவற்றுறை பகுதியில் இளைஞன் ஒருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்று பிற்பகல் இடம் பெற்ற இச்சம்பவத்தில் நாரந்தனை மேற்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பிரதீபன் (வயது 31) என்வரே கொலை செய்யப்பட்டவராவார்.

இவரது சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இவர் தாக்கப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-3)







## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் சம்பியன் லேனுக்கும் தாவடிச் சந்திக்கும் நடுப் பகுதியில் (நந்தாவில்) 10 1/4 பரப்பு காணி 2 மாடிக் கட்டடத்துடன் (கீழ்த் தளம் 2 கடை, மேல்தளம் வீடு விற்பனைக்குண்டு. முகப்பு K.K.S. வீதிப் பக்கமாக சுமார் 130 அடி அகலம் கொண்டது.

தொடர்பு:- 077 7789739 (1834)


## கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் வீணைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் இன்று மாலை 5 மணிக்கு வீணைக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் திருமதி விதுஷா கோபிகிருஷ்ணாவும் அவரது மாணவிகளும் வீணைக் கச்சேரியை வழங்கவுள்ளார்கள்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட வீணை விரிவுரையாளர் எ.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6)

## பேராசிரியர் காலிதீனின் மறைவுக்கு யாழ்.பல்கலைக் கழக சமூகம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வும் அர்ப்பணிப்பும் மிக்க இஸ்லாமிய நாகரிகத்துறைப் பேராசிரியர் அல்ஹாச் மௌலவி கே.எம்.எச்.காலிதீனின் மறைவுச் செய்தியில் துயறுரும் உறவுகளுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து கொள்கிறது என யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் காலிதீனின் மறைவு குறித்து அவர் வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே இதனைத் தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தில் இஸ்லாமிய நாகரியத்துறையை கட்டமைத்து 15 ஆண்டுகளுக்கு மேலாக அரும் பணியாற்றினார்.

பின்னர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்துக்காகப் பெரிது உழைத்த அவர், இஸ்லாமியத்துறைப் பேராசிரியராகி அண்மையில் ஓய்வு பெற்றார்.

அன்புக்கினிய பேராசிரியர் காலிதீனின் நினைவுகள் என்றென்றும் மறக்க முடியாதவை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அரசியல் உரிமையை பயன்படுத்த வாக்குரிமை மிக முக்கியமானது

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



இலங்கையில் எமது அரசியல் உரிமையை பயன்படுத்துவதற்கு வாக்குரிமை மிக முக்கிய மானதாகும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வாக்காளராக பதிவு செய்யப்பட்ட, ஏற்கனவே பதிவில் உள்ளவர்களும், 18 வயதை பூர்த்தி செய்தவர்களும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் உடனடியாக பதிவுகள்ள மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

இவ்வாக்காளர் பதிவு ஊடாக, எதிர்கால வேலை வாய்ப்புக்கள், நிவாரண நடவடிக்கைகள் தாங்கள் இலங்கை பிரஜை என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆவணப்படுத்தலாகவும், அமைவதால் மேற்படி மாவட்டங்களில உள்ள உதவித் தேர்தல் ஆணையாளர்கள் பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், கிராம முன்னேற்ற சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், மாதர் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோர் இதில் அக்கறையெடுத்து இப்பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-6)

## நிர்வாக சேவையில் வகுப்பு IIIக்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை

இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III க்குஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை 2009 இற்கு விண்ணப்பங்கோரப்பட்டுள்ளது. இப் பரீட்சை ஒக்டோபர் மாதம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்.விண்ணப்பதாரி 2009. 12.31 இல் அரச அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். அத்துடன் தனது சேவையில் 10 வருட சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2010 ஓகஸ்ட் 9 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு பதிவுத்தபாலில் திணைக் களத் தலைவருடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முக வரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். (ச)




மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

கங்காதரன் சாஸ்திரி

077 0712537

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம்,, பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்து தரப்படும்

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

121 A, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

(1834)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்



## முக்கிய அறிவித்தல்

பாலசிங்கம் அரிகரன் ( இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகத்தர்) ஆகிய நான் 08.07.2010 ல் இருந்து அபிராமி எலற்றிக்கலில் இருந்து விலகி தனித்து செயற்பட்டு வருகின்றேன் என்பதனை அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு மனமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். மேலும் அபிராமி எலற்றிக்கலுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதனை உறுதிபட தெரிவிக்கின்றேன்.

மேலதிக தொடர்புகளுக்கு ; 0773223038

உரிமையாளர்: பாலுகடை கட்டுடை, மானிப்பாய்.

(1832)

# இன்று ஒரு தகவல்

## உடல் மொழி

ஒருத்தர் யாரிடமோ தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தார். அவர் பேசிக்கொண்டிருப்பது என்ன என்பது நம் காதில் விழவில்லை. இருந்தாலும் அவர் பேசிக் கொள்வது நல்ல செய்தியா கெட்ட செய்தியா என்பதை அவருடைய முகத்தைப் பார்த்தே நம்மால் யூகிக்க முடிகிறது.

மகிழ்ச்சியான செய்திகளைப் பேசும் போது முகம் மலர்கிறது. புன்னகை பூக்கிறது. இதில் ஒரு விடயத்தை கவனியுங்கள்.

நம்மிடம் பேசிக் கொண்டிருப்பவர் எதிரில் இல்லை.

அவர் நம் குரலை மட்டும் தான் கேட்கப்போகிறார். நமது முகம் எப்படி இருக்கிறது என்பதை அவர் பார்க்கப் போவதில்லை. அப்படி இருந்தும் நம்முடைய முகம் ஏன் மலர வேண்டும்?

இதைத்தான்''உடல்மொழி''என்கிறார்கள். நம்மையறியாமலே நம் உடம்பு செய்திகளைத் தெரிவிக்கிறது பாருங்கள். அதுதான் உடல் மொழி.

ஒருத்தர் தொலைபேசியில் பேசுவதை நீங்கள் தூரத்திலிருந்தே கவனித்துக் கொண்டே அவர் நண்பருடன் பேசுகிறாரா? மனைவியுடன் பேசுகிறாரா? குழந்தையோடுபேசுகிறாரா?மேலதிகாரியோடு பேசுகிறாரா?

அவருக்குக் கீழே பணியாற்றுபவரிடம் பேசுகிறாரா? என்பதைக் கண்டு பிடிக்கலாம்.காரணம் உடல் மொழி. இதைப்பற்றியெல்லாம் கூட சில நிபுணர்கள் சில விபரங்களைச் சொல்கிறார்கள்.

குறிப்பாக ஒருத்தர் அவருடைய நாற்காலியில் கிட்டத்தட்ட படுக்காத குறையாக உட்கார்ந்திருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

எதிரில் இருக்கிறவர் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம்.

தலையைச்சொறிவது,வேறு வேறு திசையில் பார்ப்பது,கொட்டாவிவிடுவது ,கால்களை மாற்றிப் போட்டு உட்காருவது,களைப்பாக கைவிரல்களைப் பின்னிக் கொள்வது,அடிக்கடி கடிகாரத்தைப் பார்க்கிறது இப்படியெல்லாம் ஒருத்தர் செய்து கொண்டிருந்தாரானால் நாம் சீக்கிரம் அந்த இடத்தை விட்டு எழுந்து வந்து விடுவது நல்லது.

ஏனெனில் இதெல்லாம் அவருடைய சலிப்பு , சோர்வு , ஆர்வமின்மை. நம்முடைய பேச்சு அவரை சலிப்படைய வைத்துவிட்டது என்று அர்த்தம்.

அதேநேரத்தில் நாற்காலியின் நுனியில் அமர்ந்து , உடனே முன்னுக்கு நகர்த்தி எதிரில் இருப்பவர் கண்களைப் பார்த்துக் கொண்டே பேசினாலும் சரி அல்லது பேச்சைக் கேட்டாலும் சரி உங்கள் மீது மற்றவர்களுக்கு உள்ள பிடிப்பு அதிகரிக்கும்.

நாம் எப்படிப்பட்டவர் என்பதை நம்முடைய உடம்பும் நடை உடை பாவனையும் அடுத்தவர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிடும்.

உங்கள் உடம்பு ,உங்கள் பார்வை , நடை , உட்காரும் விதம் இதை வைத்துக் கொண்டே நீங்கள் பொறுப்பானவரா,முரடரா ,அலட்சியமானவரா ,மரியாதை தெரிந்த வரா, அடக்கமானவரா,நம்பிக்கைக்கு உரியவரா , நாணயமில்லாதவரா , பயந்தவரா,திறமைசாலியா ,அப்பாவியா என்பதைக் கண்டுபிடித்து விடலாமாம்.

அதனால் ''உடல்மொழி ''யைப் புரிந்து கொண்டு நம்மைக் கொஞ்சம் சரிப்பண்ணிக் கொண்டால் வாழ்க்கையில் சுலபமாக பல காரியங்களை சாதித்து விடலாம்.

ஒரு மனநல மருத்துவமனையில் ஒருத்தர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கார் ஓட்டுவது மாதிரி பாவனை பண்ணிக்கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த ஒருத்தர் பக்கத்திலிருந்தவரிடம்;

''ஏன் இப்படிச் செய்கிறார்? '' என்று கேட்டார்.

''இவருக்கு கார் ஓட்டவேண்டுமென்று ஆசை.அது நிறைவேறாமல் போனதால் இப்படிச் செய்கிறார் '' என்றார் அவர்.

''நீங்கள் சொல்லக்கூடாதா... இப்ப நீங்க கார் ஓட்டவில்லை.வெறும் நாற்காலியில் தான் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று ''என்றார் இவர்.

இதற்கு அவர் ,அது முடியாதுங்க... ஏனெனில் அந்தக் காரைக் கழுவுவதற்காக அவர் தினமும் எனக்கு 10 ரூபா கொடுத்துக் கொண்டிருக்கிறாரே ''என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சித்திர, கவிதை போட்டிகளில் முதலிடம் பெற்றோர் விபரம்

(அல்வாய்)

வடக்கு மாகாணத்தின் ஜி.ரி. இசற். அனுசரணையுடன் பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம் எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்பட்ட சித்திர , கவிதைப் போட்டி முடிவுகளை வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் (கல்வி அபிவிருத்தி சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் முதலிடம் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு ,

**பருத்தித்துறை கோட்டம்**
**சித்திரம் - (சுவரொட்டிப் போட்டி)**

**பிரிவு-I**
சி. அஸ்மிரா (யா/ பருத்தித் துறை சித்தி விநாயகர் வித்தி

**பிரிவு-II**
ச.சிந்துசன் (யா/ ஹாட்லிக் கல்லூரி)

**பிரிவு-III**
க.ரகுகரன் (யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி)

**பிரிவு-IV**
யோ.பகீரதன் (யா/ ஹாட்லிக் கல்லூரி)

**பிரிவு-V**
கே.கோபிகா (யா/வடஇந்து மகளிர் கல்லூரி)

**கவிதைப் போட்டி**

**பிரிவு-I**
செ.தயாளினி (யா/வல்வை சிவ குரு வித்தி)

**பிரிவு-II**
இ.சுபாசினி (யா/வல்வை சிவ குரு வித்தி)

**பிரிவு-III**
அ.தமிழரசன் (யா/கொற்றா வத்தை அ.மி.த.க.பாடசாலை)

**பிரிவு-IV**
அ.கயல்விழி (யா/வட இந்து மகளிர் கல்லூரி)

**கரவெட்டி கோட்டம்**
**சித்திரம் (சுவரொட்டி போட்டி)**

**பிரிவு-I**
க.தம்சன் (யா/மணியந் தோட் டம் அ.த.க.பாடசாலை)

**பிரிவு-II**
ப.பிரவின் (நெல்லியடி ம.ம. வித்தி

**பிரிவு-III**
ர.மிதுர்ஷா (நெல்லியடி ம.ம. வித்தி

**பிரிவு-IV**
பி.தி.தினேஷ் (நெல்லியடி ம.ம. வித்தி

**பிரிவு-V**
அபிராம் (நெல்லியடி ம.ம. வித்தி

**கவிதைப்போட்டி**

**பிரிவு-I**
வி.சாலினி (யா/கரணவாய் மகா வித்தி

**பிரிவு-II**
ம.அக்சாலினி (யா/தேவரையாளி இந் துக் கல்லூரி)

**பிரிவு-III**
பெ.சுவாங்கி(யா/விக்னேஸ் வரா கல்லூரி)

**பிரிவு-IV**
அ.இலக்கியா (யா/விக்னேஸ்வரா கல்லூரி)

**மருதங்கேணி கோட்டம்**
**சித்திரம்(சுவரொட்டிப் போட்டி)**

**பிரிவு-I**
செ.ஜெ.ஜெலஸ்ரீனா (யாழ். மணற் காடு றோ.க.த.க.பாடசாலை)

**பிரிவு-II**
செ.பிரதீபன் (யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்)

**பிரிவு-III**
சி.கயன் (யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை)

**பிரிவு-IV**
அ.அமிலவிஜிதன் (யா/குடத் தனை கரையூர் அ.மி.த.க. பாட சாலை)

**கவிதைப்போட்டி**

**பிரிவு-I**
த.பிருந்தா (யா/குடத்தனை அ.த.க. பாடசாலை)

**பிரிவு-II**
ஆ.சரஞ்ஜீதா (யா/நாகர்கோ வில் மகா வித்தியாலயம்)

**பிரிவு-III**
இ.ரஜிதா (யா/குடத்தனை அ.த. க. பாடசாலை)

**பிரிவு-IV**
சி.சிவசேகரன் (யா/ அம்பன் அ.மி.த.க. பாடசாலை) . (6-19)

# கிராமப்புற பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## கல்வியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை செல்லும் வயதில் உள்ளவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி கிராமிய பாடசாலைகள் மூடப்படுவதற்கான காரணமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டிலிருந்து இந்த வருடம் வரையிலான காலப் பகுதியில் பாடசாலை செல்லும் வயதில் உள்ளவர்களின் எண்ணிக்கை 8 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் இது குறித்து தகவல் தருகையில் , இலங்கையில் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைவடைந்துள்ளமையே இதற்கு காரணமாகும் என குறிப்பிட்டார்.

சில பெற்றோர் தமது பிள்ளைகளை கிராமப்புற பாடசாலைகளில் அனுப்புவதில் விருப்பம் காட்டவில்லை எனவும் பிள்ளைகளை நகரங்களிலுள்ள பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதற்கு அநேகமான பெற்றோர் முயற்சிப்பதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் கிராமப்புற பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்போது மூடப்பட்டுள்ள கிராமப்புற பாடசாலைகளின் தொழில் பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார் இந்த பயிற்சி நிலையங்களில் ஆங்கிலம், கணனி பயிற்சி நெறிகளும் நடத்தப்படவுள்ளது. (6-4)

# இராசி பலன்


*10.07.2010*
*(ஆனி26, சனிக்கிழமை)*
*சதுர்த்தசி பின்னிரவு 3.37 மணிவரை*
*மிருக சீரிடம் பிற்பகல் 5.54 மணிவரை*
*இராகுகாலம் 8.58-10.28 மணிவரை*
*சுபநேரம் 2.58-4.28 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, சுவாரஸ்யம், பொருள் சேர்க்கை. |
| இடபம் | விவாதம், தொழிலில் மந்த நிலை, அதிகசெலவு, கௌரவக் குறைவு. |
| மிதுனம் | கற்பனை மிகுதி, உஷ்ண வியாதி, நல்ல முயற்சி, போசன சுகம். |
| கடகம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் மனஸ்தாபம், சோம்பல் நிலை. |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, கீர்த்தி. |
| கன்னி | நன்கொடை, ஆரோக்கியமான நிலை, அதிகாரம், முயற்சி கைகூடும். |
| துலாம் | பித்தரோகம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | எதிர்பாராத பகை, முயற்சி தடங்கள், ஆரோக்கியக் குறைவு, அபகீர்த்தி. |
| தனுசு | களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், மனோதைரியம், தேகநலன். |
| மகரம் | உற்சாகம், காரிய அனுகூலம், பகைவர் நேசம், போசன சுகம். |
| கும்பம் | குடும்பக் கவலை, பணக் குறைவு, அஜீரண ரோகம் முயற்சிதாமதம். |
| மீனம் | மனச்சஞ்சலம், சுப செலவு, நண்பர்கள் சந்திப்பு, அதிக பிரயாசை. |

**வளவன்**

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 130 |
| தக்காளி | 60 | 70 | 75 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 140 | 160 | 130 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 35 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 60 |
| பாகற்காய் | 140 | 120 | 75 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 90 | 120 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 |
| பீற்றூட் | 70 | 70 | 60 |
| கறிமிளகாய் | 120 | 130 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 110 |
| போஞ்சி | 80 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 100 | .120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |



வடமாகாண ஆளுநரின் நிதியில் உரும்பிராய் ஸ்கந்தவரோதயா வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டன.இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்வி அலுவலக கணிதபாட ஆசிரிய ஆலோசகர் எஸ்.மகாநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், வித்தியாலய அதிபர் அன்ரன் பிறேமதாஸ் உரையாற்றுவதையும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவி ஒருவருக்கு பாதணி வழங்குவதையும் வித்தியாலய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

## மரதன் ஓட்டப் போட்டியும் சைக்கிளோட்டப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 91 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் மரதன் ஓட்டப் போட்டியும், சைக்கிள் ஓட்டப்போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இதில் மாவட்ட ரீதியில் 10 Km தூரம் கொண்ட ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் , உள்ளூர் ரீதியில் 5 Km தூரம் கொண்ட பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் இடம்பெறும் என மேற்படி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (6)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் . கந்தர்மடம் பழம் வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளதுடன் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு இசையும் இறைவனும் என்னும் விடயம் பற்றி கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா இசைச்சொற்பொழிவாற்றவுள்ளார். (6-4)

## பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் "வயவன் மலர்-10" நூல்வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.கனகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சிவகுரு பத்மநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் , வித்தியாலய முன்னாள் அதிபர் இ.ஆறுமுகம் , கௌரவ விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவனும் பொறியியலாளருமான ச.சர்வராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் நூல் மதிப்பீட்டுரையை யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் மா. பா.மகாலிங்கம் வழங்கவுள்ளதுடன் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி கமலாதேவி பத்மநாதன் வழங்கவுள்ளார். (4-9)

## கொமர்ஷல் வங்கியின் கிளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் திருநெல்வேலிக் கிளையானது பலாலி வீதி , திருநெல்வேலி எனும் முகவரியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11.27 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. (6-4)

# யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் 23 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை , சுவரொட்டிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவ களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு நிறுவனத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் நிர்வாகச் செயலாளர் நா.சிவநாதன் அறிவித்துள்ளார்.

**கட்டுரை -(மாற்றுவலுவுடையோர்)**

அ.அருளம்பலம் (சென்செபஸ்தியான் வீதி, கோண்டாவில்), சு.சிவராசா (கொக்குவில்) , செல்வன் சொ.தருமதன் (யா-யூனியன் கல்லூரி -தெல்லிப்பழை).

**கட்டுரை - (மாணவர்கள்)**

ஸ்ரீ.நிரோஷனா (யா/விக்டோரியாக் கல்லூரி,சுழிபுரம்),ஸ்ரீ.றம்யா(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),செ.சேந்தன் -(யா/இந்துக் கல்லூரி)

**கட்டுரை- (பொதுமக்கள்)**

திருமதி வாசுகி உமாபதி சர்மா (சித்தன்கேணி), ஜ.சச்சிதானந்தம்(ஞானி) (யாழ்ப்பாணம்),பு.சௌமியா-(கரவெட்டி)

**கவிதை - (மாற்றுவலுவுடையோர்)**

முருகேசு பொன்னுத்துரை (காளி கோவிலடி கொக்குவில்)

**கவிதை -(மாணவர்கள்)**

இ.ரிஷிதா - (யா/நயினாதீவு மகா வித்தியாலயம்),ஜீ.மாதுரி (யா/விக்டோரியாக் கல்லூரி, சுழிபுரம்), இ.லக்சி- (யா/சண் டிலிப்பாய் இந்துக்கல்லூரி)

**கவிதை -(பொதுமக்கள்)**

இரத்தினசபாபதி குலசிங்கம் (நயினாதீவு), இ.சிவகாமசுந்தரி (மீசாலை), வல்லிபுரம் யோகானந்தசிவம்(வட்டுக்கோட்டை)

**சுவரொட்டி -(மாற்றுவலுவுடையோர்)**

ச.நிறஞ்சன் (ஆனந்தகுமாரசாமி நலன்புரி நிலையம் செட்டிக்குளம், வவு னியா),

**சுவரொட்டி - (மாணவர்கள்)**

தே.பபிராஜ் (யா/ இணுவில் மத்திய கல்லூரி,சு.சுஜிகரன் (சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி), யோ.அரவிந்தன்- (இணுவில் மத்திய கல்லூரி)

**சுவரொட்டி - (பொதுமக்கள்)**

ச.நிருபராஜ் (கோப்பாய் தெற்கு, கோண்டாவில்), செ.ஜெகன்,அ.பிரபாகரன் (பாலசிங்கம் விடுதி, யாழ்.பல்கலைக்கழகம்). (6-4)

# யாழ்.மாநகர சபையின் பொதுக்கூட்டத் தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் 9ஆவது மாதாந்த பொதுக்கூட்டம் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு,

▶மாநகரசபையின் புதிய நகர மண்டபக் கட்டடத்துக்காக வெளிநாட்டில் உள்ள நலன் விரும்பிகளிடமிருந்தும், பொது அமைப்புக்களிடமிருந்தும் பெறப்படும் நிதியை வைப்புச் செய்வதற்காக இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கு ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற 2010.06.16 ஆம் திகதிய நிதிக் குழுக்கூட்டத் தீர்மானத்தின் சிபார்சு 2010.06.30 ஆம் திகதி நடைபெற்ற 9 ஆவது மாதாந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

▶கட்டடக் கலைஞர் துரைராஜாவினால் எழுதப்பட்டு நூல் நிலையத்துக்கு வழங்கப்பட்டு "சாம்பரிலிருந்து எழும் யாழ்ப்பாணம்" என்ற புத்தக விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை MICRO FLIMING தேவைக்காக பயன்படுத்துவதற்காக யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கவேண்டுமென்ற நிதிக் குழுவின் 11ஆவது சிபார்சு 2010.06.30 ஆம் திகதி நடைபெற்ற 9ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"நெல்சிப்" திட்டத்துக்கு வழங்கப்படும் நிதியை வைப்பிலிடுவதற்கு வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதால் இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

குருநகரில் அமைந்துள்ள தங்கம்மா பிரசவ விடுதியை தரமுயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரை கோருவதென தீர்மானிக்கப்பட்டது.

சுப்பிரமணியம் பூங்காவினை பார்வையிட வருபவர்களின் நலன்கருதி அங்கு ஒரு சிற்றுண்டிச்சாலையை அமைக்க வேண்டுமென தீர்மானிக்கப்ப்ட்டது போன்றனவாகும். (6-4)

## வெப்பமான காலநிலை காரணமாக மக்கள் பாதிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள வெப்ப காலநிலையால் பல்வேறு நோய்களுக்கு பலர் இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது குடாநாட்டில் நிலவும் வெப்ப காலநிலை காரணமாக மக்கள் காய்ச்சல் , மலேரியா, சின்னமுத்து , செங்கண்மாரி போன்ற பல்வேறு நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

அதேவேளை இப்பகுதியிலுள்ள நீர்நிலைகளில் , நீரின் அளவும் குறைந்து காணப்படுகிறது.

இதனால் , கால்நடைகள் குடிநீருக்கு அலைந்து திரிவதையும் அவதானிக்க முடிகிறது. (6-10)

## சிவசக்தி மணிமண்டப ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி சுகந்திஸ்ரீமுரளிதரன் , சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

## விளையாட்டு விழா

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையமும் சிவன் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் செ.சிவநடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸ்குமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் கிழக்கு கிராம அலுவலர் வி.எம். இராமலிங்கம்,சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராஜா மற்றும் உடுவில் முன்பள்ளி இணைப்பாளர் புஸ்பராணி லோகேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக திரு.திருமதி கலாநிதி நாகேந்திரம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(6)





## மறுபாதி ஈழத்து சஞ்சிகை நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் பொது நூலகம், வலி.தெற்கு பிரதேச வாசகர் வட்ட அனுசரணையுடன் நடத்தும் "மறுபாதி" ஈழத்து சஞ்சிகை அறிமுகவிழா இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் வாழ்வகத் தலைவரும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான ஆ. இரவீந் திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஈழத்துக் கவிதை இயங்கியலில் "மறுபாதி " சஞ்சிகையின் இடமும் இருப்பும் என்னும் பொருளில் நூல் அறிமுகவுரையை யாழ். கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரன் வழங்கவுள்ளதுடன் நூலின் முதற்பிரதியை சத்தியப்பிரமான ஆணையாளரும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான செல்வி ஞானலோஜினி சிவஞானம் பெற்றுக் கொள்ளவுள்ளார். (4-9)

# இணுவில் கந்தசுவாமி கோவில்
# தேர்த்திருவிழா சிறப்பு மலர்-10.07.2010.



## இணுவில் கந்தசுவாமி கோவில் வரலாற்றுச் சுருக்கம்

இணுவிலில் அணிசெய்யும் ஆலயங்களில் சரித்திரப் பிரசித்தி பெற்று, பெரிய கோவில் என்று சிறப்பிக்கப்படும் ஆலயம் "இணுவில் கந்தசுவாமி" ஆலயமாகும். கிட் டத்தட்ட நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு முருகன் அடியாரான அருணாசலம் அவர் கள் நித்திரையாக இருந்தபோது, முருகப் பெருமான் அவரின் கனவில் தோன்றி தான் காஞ்சியம்பதியிலிருந்து வருவதாகவும் தமக்கென இல்லிடமொன்று அமைத்துத் தருமாறும் கேட்டார். அடியவர் எங்கே அமைத்துத் தருவது என வினவிய போது, உங்கள் வெற்றிலைத் தோட்டத்தினுள் நொச்சித் தடியொன்று நாட்டப்பட்டிருப்பதாகவும் அந்த இடத்திலேயே அமைக் கலாமெனவும் ஆலோசனை கூறினார். கனவின் உண்மையினை அறிய விரும்பிய அடியவர் மறுநாள் காலை தோட்டத்தில் சென்று பார்த்தபோது வியப்படைந்தார். தனது தோட்டத்தில் இருந்த மாட்டுக் குடிலின்அருகே நொச்சித்தடி நடப்பட்டிருந்தது. அங்கு வேலினை வைத்து வணங்கினார். இம் மகிமையை அறிந்த ஊர்மக்களும், அயற் கிராமத்தவர்களும் வணங்கினார்கள். காலப்போக்கில் அடியார்கள் மிகுந்து வந்தமையால் பூசை வழிபாடுகளை அருணாசலம் தானே முன்னின்று நடத்தினார். அதன் பின்னர் அவர் தம் சந்ததியினரும் பரிபாலித்து வந்தனர்.

தொடர்ந்து செங்கல்லினால் கட்டப்பட்ட கோவில், 1840 ஆம் ஆண்டு வெள்ளைக் கற்களால் கட்டப்பட்டது. படிப்படியாக கோவில் வளர்ச்சியடைந்து வரும் வேளையில் 1910 ஆம் ஆண்டில் உலகப் பிரசித்தி பெற்ற திருமஞ்சமானது இணுவையூர் தத்துவஞானியான பெரியசந்நியாசியார் (சுப்பிரமணியசுவாமி) அவர்களின் கண்ணோட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.

இக் கோயிலானது பொதுக் கோயிலாக மாற்றம் பெற்ற பின்னர் மூன்று தள இராஜ கோபுரமானது ஐந்து தளமாகவும், லண் டனிலிருந்து வருவிக்கப்பட்ட புதிய காண்டாமணியும், மணிமண்டபமும் நிறுவப்பட்டுள்ளன.

பெருந் திருவிழாவானது ஆனிமாத அமாவாசையினைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு 25 திருவிழாக்கள் சிறப்புடன் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாலயத்தின் கீர்த்திக்குச் சான்று பகரும் மற்றுமோர் அம்சம் புண்ணிய தீர்த் தமாகும். வடக்குப் பக்கத்தில் சாந்தியடி வைரவர் சந்நிதியும், அதன் முன்பாகவுள்ள தீர்த்தக் கிணறும் பிரசித்தமானவை. அடியார்களைப் பிடித்த நோய்களைக் குணப்படுத்தி சாந்தி அளிக்கும் தன்மை இத் தீர்த்தத்திற்கு உண்டு. அடியார்களுக்கு ஏற்படும் அல்லல் களைக் களைந்து ஆறுதலளிக்கும் சாந்தியடி வைரவப் பெருமானும், நொச்சியம்பதி முருகப் பெருமானும் இணுவையம்பதி மக்களின் கண்கண்ட தெய்வங்கள் என்பது மனம் கொள்ளத்தக்கன. தேர்த்திருவிழாவன்றும், மஞ்சத் திருவிழாவன்றும் ஆறு முகப்பெருமான் (சண்முகப் பெருமான்) வீதியுலா வருவது கண்கொள்ளாக் காட் சியாகும்.

இங்கு கோயில் கொண்டு உறைந்துள்ள முருகப் பெருமானை நொச்சியம் பதியான், காஞ்சியம்பதியான், கல்யாண வேலவர் எனப் பல சிறப்புப் பெயர்கள் கூறி மக்கள் பக்தி வெளிப்பட வழிபடுவார்கள்.

செ.சோதிப்பெருமாள் (ஜே.பி)
தலைவர்,
தர்மகர்த்தா சபை.

## பரம்பரைக் குருக்களின் ஆசிச்செய்தி



இலங்கைத் தீவில் இந்துமதத்தின் பெருமைகள் சேர் யாழ்ப்பாணத்தில் இணுவையம்பதி எனும் கிராமத்தில் பிரசித்திபெற்ற பல ஆண்டு காலம் போற்றப்பட்டு பல ஆயிரம் மக்கள் பார்த்து மெய் சிலிர்க்கின்ற திருமஞ்சம் அமையப் பெற்ற பல அறிஞர்கள், கற்றோர்கள், கலைஞர்கள், சிவாச்சாரியார்கள் கண்ட இணுவில் கந்த சுவாமி கோவிலில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சகிதம் தேரில் வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். முருகப் பெருமானை வணங்க வரும் அனைத்து அடியவர்களுக்கும் திருவருள் கிடைக்க இத் தினத்தில் ஆசியுரை வழங்குகின்றேன்.

அபராஜிதக் குருக்கள்
சிவஸ்ரீ உருத்திரமூர்த்தி
ஆலய பிரதமகுரு.

## முருகன் அஞ்சேலென அருட்பவனி வரும் காட்சி காண வாரீர்

சித்தர்களும் பக்தர்களும் வாழிணுவை மண்ணில்
முத்தி தரும் முருகனாய் அமர்ந்தவனே!
பக்தியுடன் கொண்டாடும் அடியவர் தம்
துன்பங்கள் நீக்கும் முருகா!
சித்திகள் பல செய்யும் சிவனாரின் மகனே!
முருகா வள்ளி தெய்வ யானையுடன்
சித்திரத் தேரேறி வருவாய் உன் சிங்காரப்
பவனியிலே தீங்குகள் தீர்த்திடுவாய்

திருவாழ மிணுவை மஞ்சத்தால் பேர் போன இணுவைக்கு
இன்று பெருவிழா அழகாக
அருளமர்ந்த ஆறுமுகன் தேர்த்திருவிழா அடியவர்க்கு
இது அருள்விழா அன்பர் குறை தீர்க்கும் விழா
வஞ்சினம் பேசுவோரை அஞ்சி ஓட வைக்கும் விழா
தஞ்சமென நின்றோரைக் காக்கும் விழா
நெஞ்சுருகிப் பக்தரெலாம் வடம்பிடிக்க முருகன்
அஞ்சேலென அருட்பவனி வரும் காட்சி காணவாரீர்

பண்டிதை திருமதி கணேசபிள்ளை, ஆசிரியை, இணுவில்

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்


உதயசூரியன் சலவையகம்
உரிமையாளர்:
சி.யோகநாதன் கே.கே.எஸ்.வீதி, இணுவில்
கோவில் வாசல்

ஜெயந்தா மில்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்

தாசன் ஸ்ரூடியோ
சிறந்த புகைப்படச் சேவை
T.P: 0212227724
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்

தரமான நகைகளை குறித்த
தவணையில் ஓடர் செய்து
பெற்றுக்கொள்ள, இன்றே நாடுங்கள்
புதிய கஜீபன் நகைமாடம்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்

சீமெந்து, மஸ்கன்சீற்,
டியூலெக்ஸ் கோஸ்வே பெயின்ற்,
கம்பிகள், எஸ்லோன்பைப், அனைத்து
கட்டடப் பொருட்களையும் மலிவாக
பெற்றிட
VARMA HARDWARE
K.K.S.ROAD, INUVIL

வாகனங்களுக்குரிய Numberplates,
சகல விதமான Stickers வேலைகளும்
அழகுசாதனப் பொருட்களும் பெற்றிட
CHELVA PLASTIC
K.K.S.ROAD, KONDAVIL
T.P 0217429580

கர்ப்பிணித் தாய்மார்க்கும் சிறார்களுக்கும் ஏற்ற போசாக்கு நிறைந்த சத்துமா வளரும்
குழந்தைகளுக்கேற்ப தாய்மார்களுக்கும் வயோதிபர்களுக்கும் ஏற்ற சத்துணவு ஜீவாகாரம்
அன்னா தொழிலகம்
துரை வீதி, இணுவில்

அனைத்து வகை மின்சார
உபகரணங்களை மிகவும் மலிவாகப்
பெற்றிட
ஸ்ரீ வாலாம்பிகை அன் சன்ஸ்
T.P :0773164485
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்

சிறிகண்ணன் ஜுவல்ஹவுஸ்
கண்கவர் தங்கநகைகளின் தங்கச்
சுரங்கம்
T.P :021 4590995
Mobile:- 0779231602, 0602219054
K.K.S.ROAD, INUVIL


ஸ்ரீ சிவகணகுமரன் அரிசி ஆலை
யாழ்.மண்ணில் முதற்தரமான அரிசி வகையை மொத்தமாகவும்
சில்லறையாகவும் மலிவாகப் பெற்றிட
மானிப்பாய் வீதி,
இணுவில்

பலசரக்குப் பொருட்களை
மலிவாகப் பெற்றிட
கண்ணா களஞ்சியம்
T.P:021 2223621 கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு

நாதன் சகோதரர்கள்
பலசரக்குப் பொருட்கள் மொத்த,
சில்லறை விற்பனையாளர்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்

NEWS PAPER AGENT
பாடசாலை உபகரணம் மற்றும் எல்லாப்
பத்திரிகையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
K.K.S.ROAD, INUVIL
T.P: 021-2226718

சுத்தமான சைவ உணவு
வகைகளைப் பெற்றிட
இலச்சுமி உணவகம்
உரிமையாளர்:
செ.செல்வேந்திரன் கே.கே.எஸ்.வீதி,
இணுவில்



யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய முன்னாள் அதிபர் தி.சோமசேகரத்தின் பிரிவுபசார விழாவில் விழா நாயகர் பாடசாலைச் சமூகத்தினரால் அழைத்து வரப்படுவதையும் அதிபர் ப.கணேசன், திரு.திருமதி தி.சோமசேகரம் தம்பதிகளுக்கு வாழ்த்துப்பா வழங்குவதையும் மாணவி ஒருவர் மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடாதென்ற இனவாதத்தின் உச்சக்கட்டமே ஐ.நா.அலுவலக முற்றுகை

## இடது சாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் முற்றுகையிடப்பட்டதன் பின்னணியில் அரசாங்கமே உள்ளதென குற்றம் சாட்டும் இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி இச்செயலானது இனவாத மிலேச்சத்தனமானதாகும். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை வெளிக் கொண்டுவருவதைத் தடுக்கும் நாடகமாகும் என்றும் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், ஐ.நா.செயலாளர் பான் கீ மூன் அமைத்த நிபுணர் குழு இன்று சவாலுக்கு முகம் கொடுத்துள்ளது.

யுத்தத்தின் போது தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை, உயிரிழப்புக்களை ஆராய்ந்து விசாரணை நடத்தும் குழுவிற்கு ஏன் அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்?

இன்று தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான அனைத்து வழிகளையும் அரசாங்கம் மூடியுள்ளது. வெளிநாட்டில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் முக்கியஸ்தர்களை இங்கு அழைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தி சர்வதேச ரீதியாக அவர்களை தமிழர்களுக்காக குரல் கொடுத்ததை கே.பி.யை பயன்படுத்தி நிறுத்தியுள்ளது.

சர்வதேச ரீதியில் தமிழ் மக்களுக்காக எழுப்பப்பட்ட குரல்கள் அடக்கப்பட்டுள்ளன. எனவே, அரசாங்கம் பயமில்லாமல் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது.

தமிழ்மக்களுக்கு நியாயம் கிடைக்கக் கூடாதென்ற இனவாதத்தின் உச்சக்கட்டமே அமைச்சர் விமல்வீரவன்சவை பயன்படுத்தி ஐ.நா. அலுவலகத்தை அரசாங்கம் முற்றுகையிடச் செய்தது.

எனவே,நாட்டின் ஜனநாயகத்திற்கு எதிர்காலத்தில் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள ,முஸ்லிம் அனைத்து இன மக்களுக்கும் எதிராகவும் செயற்படும் . எனவே இதற்கு எதிராகப் போராடத் தயாராகவேண்டும் என்றார். (6)

# யாழ். மாநகரசபையால் வீதி திருத்தும் பணிகள்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை பணியாளர்களால், நாவலர் வீதி திருத்தும் முதல் கட்ட வேலைகள் நிறைவுக்கு வருகின்றது.

தொடர்ந்து ஈச்சமோட்டை வீதி திருத்தும் பணிகள் ஆரம்பிக்கபட்டுள்ளது.

தாரை உருக்கி அடுப்பில் சல்லிக் கற்களுடன் கலந்து, அந்தக் கலவைகளை உழவு இயந்திரங்கள் மூலம் கொண்டு சென்று, குன்றும் குழியுமாக உள்ள வீதிகளை கட்டம் கட்டமாக மாநகரசபை பணியாளர்கள் செப்பமிட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. (6-51)

# சமூக சேவைகள் அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்தில் நடமாடும் சேவை

(கொழும்பு)

சமூக சேவைகள் அமைச்சு கிளிநொச்சி மாவட்டத்தில் நடமாடும் சேவையொன்றினை எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை கிளிநொச்சி (கனிஷ்ட) மகா வித்தியாலயத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் முதியோர்களுக்கான அடையாள அட்டை வழங்குதல், சுயதொழில் ஊக்குவிப்பு நிதி வழங்குதல் மற்றும் முதியோர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதில் அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-4)

# பனைவள ஆராய்ச்சி நிலையத்தை மீண்டும் இயக்க இந்தியா நிதியுதவி

## பனைவள அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

கைதடியில் அமைந்துள்ள பனை வள ஆராய்ச்சி நிலையத்தை மீண்டும் இயக்குவதற்கு இந்திய அரசாங்கம் 85 மில்லியன் ரூபா நிதியை வழங்க முன்வந்துள்ளதாக பனை வள அபிவிருத்தி சபையின் தலைவர் ப.சீவரெத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு , கிழக்கில் கற்பகம் என்ற பெயரில் இயங்கி வருகின்ற விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது. பனையில் இருந்து தயாரிக்கப் பட்ட பொருட்களை தென்னலங்கை சுற்றுலாப் பயணிகள் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பனைவள ஆராய்ச்சி நிலையம் இயங்க ஆரம்பித்தால் வேலை வாய்ப்புகள் கிடைக்குமெனவும், உள்நாட்டு உற்பத்தி பொருட்களால் வருமானம் அதிகரிக்குமெனவும் தெரிவித்தார். (6-51)

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் திக்கம் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திக்கம் பாலர் பாடசாலை மைதானத்தில் தலைவர் கு.தினேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உடற்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வகுமரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4)

# குடாநாட்டின் இன்றைய வானிலை

(யாழ்ப்பாணம்)

இன்று பிற்பகலிற்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை யாழ். குடாநாட்டில் ஆங் காங்கே பெய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாக திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று மதியம் 1மணி 52 நிமிடத்தில் இருந்து 2 மணிவரை திரு நெல் வேலியில் பெய்த மழையின் அளவு 1.1மி.மீ. பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# தி.மு.க சார்பில் கனிமொழி நாடாளுமன்ற அமைச்சராகலாம் ?



(கொழும்பு)

மத்திய அமைச்சரவை அடுத்த வாரம் மாற்றியமைக்கப் படும் போது திமுக சார்பில் கனிமொழி நாடாளுமன்ற அமைச்சராகலாம் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக சட்டமன்றத் தேர்தல் பணிகளில் கவனம் செலுத்தும் வகையில் மு.க.அழகிரி பதவி விலகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பணிச்சுமையைக் குறைக்குமாறு பிரதமர்மன்மோகன்சிங்கிடம் விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் கோரியுள்ளதால், அவரது துறைக்கு இரு இணையமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

சரத்பவாரிடம் விவசாயத்துறையை மட்டும் விட்டு விட்டு அவர் வசமுள்ள உணவுத்துறை மற்றும் பொதுவழங்கல் துறைக்கு என தனியாக இரு இணையமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பதவிகளுக்கு பிரதீப் ஜெயின்(காங்கிரஸ்) சிசிர் அதிகாரி (திரிணாமூல் காங்கிரஸ்) ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (6)

# வருடாந்த திருவிழா

(ஊர்காவற்றுறை)

மேற்கு வீதி புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும்16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிறைவுபெறுகின்றது. (6-72)

# பட்டதாரிகளுக்கான சேவையாப்பொன்றை இயற்றுவதற்குத் தீர்மானம்

## அமைச்சர் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அரசதுறையில் இணைக்கப் பட்டுள்ள பட்டதாரிகளுக்கான சேவையாப்பொன்றை இயற்றத் தீர்மானித்துள்ளதாகபிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், மஹிந்த சிந்தனையின் கீழ் கடந்த 5வருட காலத்தில் 65ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்கம் நியமனம் வழங்கியது, இவர்களின் பதவி உயர்வு, இடமாற்றம், பொறுப்பு, எதிர்காலம் என்பன தொடர்பில் உள்ள பிரச்சினைகனை தீர்ப்பதற்காகவே சேவை யாப்பு தயாரிக்கப்படுகிறது

இதற்கு முன் பட்டதாரிகளும் அரச துறையில் தொழில் வழங்கப்பட்டதில் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் சவால்களில் இருந்து அனுபவம் பெற்றே மக்கள் சபை செயலாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர் என்றார்.(6)

# சைவபரிபாலன சபையினால் நடத்தப்பட்ட பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலனசபையினால் நடத்தப்பட்ட அகில இலங்கை சைவநெறித் தேர்வில் சைவநெறி, தமிழ்மொழி ஆகிய பாடங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் சபைச் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் விபரம் வருமாறு,

**சைவநெறி**

**தரம் -2**

சி.சிவாம்சன் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை,செ.அபிநயா -சத்தியசாயி பாடசாலை, ர.வசீகரன்- பரு. சித்திவிநாயகர் வித்தியாலயம்.

**தரம் -3**

சி.மனாமிர்தன் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை,வி.தாரகா- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை,கை.அனிற்றா - ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை, ப.பவதாரகன் - யாழ்.இந்து ஆரம்பப் பாடாசலை.

**தரம் -4**

பா.காருண்ஜா-புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், வி.சாத்விகா - சத்தியசாயி பாடசாலை, ம.கம்சாயினி- கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன்ப பாடசாலை.

**தரம் -5**

ப.வைஷ்ணவி - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, ஜெ.கிருன்சிகா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்,வ.சபிதா- ஊரெழு கணேச வித்தியாசாலை.

**தரம் -6**

உ.பபிந்தா- கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், கு. மனோஷிகா- தேவரையாளி இந்துக் கல்லூரி,ம.சுர்த்திகா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**தரம் -7**

சி.கார்த்திகா -சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வி.விதுசா- உடுவில் மகளிர் கல்லூரி,ம.நிலுஜா - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**தரம் -8**

செ.சுமித்தா - கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்,பு.மயூரி - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, வி.சுசி -யாழ். இந்துமகளிர் கல்லூரி.

**தரம் -9**

கி.கிருசாந்தி - தேவரையாளி இந்துக் கல்லூரி, சு.விஜிதா - மகாஜனக் கல்லூரி, யோ. சிறீநங்கை- தேவரையாளி இந்துக் கல்லூரி.

**தரம் -10**

கோ.தர்மிக்கா - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, கு.நிலக்ஷன்- யாழ்.இந்துக் கல்லூரி, இ.விஜு-யாழ்.இந்துக் கல்லூரி.

**தரம் -11**

ச.சரண்ணிஜா -சர்வகச்சேரி இந்துக் கல்லூரி, பா.சரண்யா - விக்னேஸ்வராக் கல்லூரி, இ.இராஜப்பிரவிந்தன் - சாவகச் சேரி இந்துக்கல்லூரி.

**தரம் -12**

**இந்துநாகரிகம்**

லோ.மயூரி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி,சி.ஷாலினி - வரணி மகாவித்தியாலயம், ம.ஆரணிக்கா -சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**தரம் -12**

**இந்துசமயம்**

நி.பாபுதரன் - மகாஜனாக் கல்லூரி,ஈ.கஜேந்தினி - சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,த.பிரியதர்சினி-க.மு./ இராம கிருஷ்மிஷன் மகாவித்தியாலயம்

**தரம் -13**

**இந்துநாகரிகம்**

த.தயாபரன் -கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், ந.ரவிச்சந்திரிக்கா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஞா.சிந்துஜா- முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

**தரம் -13**

**இந்துசமயம்**

ம.மயூரஸ் - மகாஜனாக் கல்லூரி,ப.பார்த்தீபன்- வட்டு இந்துக் கல்லூரி, செ.செல்வி - மகாஜனாக் கல்லூரி.

**தரம் -9**

**தமிழ்மொழி**

பா.சோபனா -இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், த.விஜிதா - விக்ரோறியாக் கல்லூரி, பு.வைஷ்ணவன் - தொல்புரம் விக்னேஸ்வர் வித்தியாலயம்.

**தரம் -10**

**தமிழ்மொழி**

ம.கார்த்தீபன் -மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், அதுளசி- வரணி மகாவித்தியால யம், அ. ஆராஅமுதன் யாழ். இந்துக்கல்லூரி.

**தரம் -11**

**தமிழ்மொழி**

இ.இராஜப் பிரவிந்தன், ச.கஸ்தூரி,பா.வனிதா - சாவகச் சேரி இந்துக்கல்லூரி

**தரம் -13**

**தமிழ்மொழி**

பொ.பாரதி -உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பு.சுமதி,ம.ஜெனனி- மானிப்பாய் மகளிர் கல்லூரி.(6-4)

## திறந்த பாடசாலை செயற்பாடுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்த பாடசாலையின் செயற்பாடுகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மேலும் இத்திட்டத்தில் பதிவு செய்த பயனாளிகளும் புதிதாகப் பதிவு செய்ய விரும்புபவர்களும் அன்றையதினம் பிற்பகல் ஒரு மணிக்குப் பாடசாலைக்குச் சமூகமளிக்குமாறு திறந்த பாடசாலை இணைப்பாளரும் பாடசாலை அதிபருமான எஸ்.வேலழகன் அறிவித்துள்ளார். (6-4)


இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்





www.inuvilkanthan.com

தேர்த்திருவிழா

தீரா வினையாவும் தீர்த்திடு

கூறிடும் வினை தீர்க்கவே
திருக் குமரனாய் வந்தவனே
தேரேறி நீ வலம் வந்தே
தீரா வினை யாவும் தீர்த்திடவே

கள்ளமில்லா உள்ளம் நாடி
கந்தனே நீ அமர்ந்தே
உள்ளமே பெருங் கோயில்
எனும் உண்மையை உணர்த்திடுவாய்

திருமதி வை.கணேசபிள்ளை ஆசிரியர்

பேரருள் புரிவாய்!

பாரில் புகழ்மிகு இணுவில் பதியினில்
தேரில் தோன்றும் தேவ சேனாபதியே!
யாருளர் வேலா? எம்மைக் காத்திட!
சீருடன் வாழநீ பேரருள் புரிவாய்

நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்

மஞ்ஞை வாகனத்தான் தேரில் வருகிறானடி

பல்லவி

கந்தனை கண்டா யோடி சகியே!
எந்தன் கண்கள் காணத் துடிக்கிதடி

அனுபல்லவி

நெஞ்சம் நினைக்கையிலே நேயம் பெருகுதடி
மஞ்ஞை வாகனத்தான் தேரில்வரு கிறானடி

சரணம்

வெஞ்சமரில் வென்ற வேலன் வருவானாம்
குஞ்சரியு மதில்கூட டவருள் வாளாம்
மஞ்சள்பூ சிமகிழ்வோ டுவள்ளியு மருவாளாம்
கஞ்சமலர் பாதம் கண்டி டுவேன்

இங்கு இணுவையிலே எங்கும் இன்பமடி
பொங்கும் இன்பமதில் போகும் துன்பமடி
மங்களவாத் தியமுழங்க தேரில்வரு கிறானடி
பங்கய பாதம் பாடித் தொழுவோமடி

(1709) பா.பாலச்சந்திரன் -மயிலணி ,சுன்னாகம்


# நிபுணர் குழு தொடர்பான கருத்து முரண்பாடுகளை இராஜதந்திர முறையிலேயே அணுகவேண்டும்

## சண்டித்தனம் காட்டினால் எமக்கே பாதிப்பு என்கிறார் கருஜெயசூரிய

(கொழும்பு)

ஐ.நா.வின் செயலாளர் நாயகம் அமைத்துள்ள நிபுணர் குழு தொடர்பில் கருத்து முரண்பாடுகள் இருந்தால் அதனை இராஜதந்திரமுறையில் அணுக வேண்டும்.மாறாக சண்டித்தனங்களைக் காட்டி அராஜக முறையில் செயல்படுவதால் எமக்கே பாரிய பாதிப்பு ஏற்படும் என்று பாராளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.க பிரதித் தலைவருமான கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இலங்கைக்கான ஐ.நா. செயலகம் மூடப்பட்டு செயற்பாடுகள் நிறுத்தப்படுமானால், அதன் கீழ் இயங்கி வரும் உலக உணவுத் திட்டம்,யுனிசெப்,சர்வதேச நாணய நிதியம், யு.என்.டி.பி, யு.என்.எச்.சி.ஆர் போன்ற ஐ.நாவின் கீழ் இயங்கி வரும் பல அமைப்புக்களின் செயற்பாடுகளும் நிறுத்தப்படும். அவ்வாறான ஒரு நிலைமை ஏற்ப்ட்டால், இலங்கை பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும் எனவும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினர்கள் கொழும்பு ஐ.நா செயல கத்தைச் சுற்றி வளைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள். இது முறையற்ற ஒரு செயற்பாடாகும்.

கொழும்பில் உள்ள ஐ.நா செயலகம் பான் கீ மூனுடையதல்ல. அத்தோடு அவரின் செயற்பாடுகள் தனிப்பட்டதுமல்ல. ஐ.நாவின் கூட்டு முடிவே அவருடைய தீர்மானம். எனவே பான் கீ மூனுக்கு எதிராக கொழும்பு ஐ.நா. செயலகத்தை சுற்றி வளைத்து ஆர்ப்பாட்டம் செய்வதானது ஐக்கிய நாடுகள் சபையையே எதிர்ப்பதாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் புத்திசாதுரியமானதல்ல. அத்தோடு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் இவ்வாறான செயற்பாட்டை முன்னின்று செயற்படுத்துவதானது எமது நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒரு செயலாகும்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்பது இலங்கையில் மாத்திரமல்ல பல்வேறு நாடு களில் செயற்பட்டு வரும் ஒரு அமைப்பாகும். அவ்வாறான ஒரு அமைப்புக்கு எதிராக ஏதா வது ஒரு நாட்டில் எதிர்ப்புக்கள் கிளம்பினால் குறித்த நாட்டின் அரசாங்கம் அது தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டும்.

அத்தோடு இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டவர்களை கட்டுப்படுத்தச் சென்ற பொலிஸாரும் தாக்கப்பட்டார்கள். இவ்வாறான அராஜக முறையில் இவர்கள் செயற்படுவ தென்பது மிகவும் மோசமான ஒரு செயற்பாடாகும்.

இதேவேளை இது குறித்து ஐ.தே.க எம்.பி ரவி கருணாநாயக்க கூறுகையில்,

விமல் வீரவன்ச தலைமையிலான குழுவி னரது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கண்டு ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் அஞ்சி விடப்போவதில்லை. அத்துடன் நிபுணர் குழுவை கலைத்து விடப்போவதுமில்லை. போராட்டம் இன்னும் சில தினங்களில் புஸ்வாணமாகிவிடும்.

எனவே இந்தப் பாராளுமன்றத்தை கேலிக்கூத்தாக்க வேண்டாம் என்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் இங்கு தன்னிச்சையான முறை யில் செயற்பட்டு வருகின்றார்.ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் மீது கும்பலுடன் சென்று தாக்குதல் நடத்துகின்றார். அவ்வலுவலகத்துக்கு முன்பாக உண்ணா.விரதத்தை நடத்துகிறார். இவ்வாறு அவர் நடந்து கொள்வதற்கு அரசாங்கத்தின் ஆதரவு இருக்கின்றதல்லவா என்ற கேள்வி எழுகிறது.

உண்மையில் அவரது செயற்பாட்டுக்கு அரசாங்கத்தின் ஆதரவு இல்லையெனில் இந்த அமைச்சர் பாராளுமன்றத்தையும் அதேநேரம் அமைச்சரவையையும் கேலிக் கூத்தாக்குவதற்கு அரசாங்கம் இடமளிக்கக் கூடாது.

வீரவன்சவின் குழுவினரது உண்ணாவிரதப் போராட்டத்துக்கு பான் கீ மூன் அஞ்சி விடவும் மாட்டார். நிபுணர் குழுவை கலைத்து விடவும் மாட்டார்.ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த உண்ணாவிரதம் இன்னும் சில தினங்களில் கைவிடப்பட்டு விடும் என்றார். (6)

# தோழனா... துரோகியா?

## நிறம் மாறும் கே.பி.?

கே.பி.



" நல்லவரா... கெட்டவரா?" - ஈழ ஆதரவுத் தமிழர்களை, கடந்த சில வாரங்களாக மீண்டும் உலுக்கத் தொடங்கிய கேள்வி இது. விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேசப் பொறுப்பாளராகவும்,பிரபாகரனின் ஆருயிர் நண்பராகவும் இருந்த கே.பி.என்கிற குமரன் பத்மநாபன் இப்போது சிங்கள அரசின் செல்லப்பிள்ளையாக வலம் வருகிறார் எனக் கிளம்பிய செய்திகளால் தான் இந்தக் கேள்வி!

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்ட கே.பி.இரகசியமான இடத்தில் இலங்கை அரசால் விசாரிக்கப்பட்டார்.

அவர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாகவும்,அவரைக் கொன்றுவிட சிங்கள அதிகாரிகள் முயற்சிப்பதாகவும் அடுத்தடுத்து செய்திகள் கிளம்பின. ஆனால், இடைப்பட்ட காலத்தில் என்ன மன மாற்றங்கள் நிகழ்ந்ததோ.... சிங்கள அதிகாரிகள் புடைசூழ நடைபோட்டு வரும் கே.பி.எதிர்வரும் வடமாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகக் களம் இறக்கப்படப் போவதாக அரசுத் தரப்பில் இருந்தே செய்திகள் கசியவிடப்படுகின்றன.

இலங்கை அரசின் போர்க்குற்றங்களை விசாரிக்க குழுவை அனுப்பி ஐ.நா.தீவிரம் காட்டி வரும் நிலையில்.... கே.பி. , சிங்கள அரசுக்கு நெருக்கமாக மாறியதாகச் சொல்லப்படுவது உலகத் தமிழர்களை அதிரவைத்திருக்கிறது. சமீபத்தில் கே.பி. மூலமாக சர்வதேசத் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒன்பதுபேரை இலங்கைக்கு வரவழைத்துப் பேசியது சிங்கள அரசு. அதில் கலந்துகொண்டவர்களில் ஒருவரான கலாநிதி அருள்குமார் என்பவர் தான் கே.பி.யின் தலைகீழ் மாற்றத்தை வெளியுலகுக்குச் சொல்லி அதிரவைத்திருக்கிறார்.

" கோத்தபாய ராஜபக்ஷ வைப் பார்த்தும் கட்டி அணைக்க முயன்றார் கே.பி. போர்க் காலத்திலேயே கே.பி.யைச் சந்தித்ததாக கோத்தபாய சொன்னார். புலம் பெயர்ந்த தமிழர்கள் எடுத்து வரும் அரசியல் நடவடிக்கைகளை அப்போது கே.பி.குற்றம்சாட்டினார்.

அப்போது தமிழக அரசியல்வாதிகளை கோமாளிகள் என்றும் அங்கிருந்தவர்கள் விமர்சித்தார்கள்" எனச் சொல்லி இருக்கும் கலாநிதி அருள்குமார்,கூடுதலான அதிர்வுகளைத் தக்க நேரத்தில் விளக்கும்முடிவில் இருக்கிறாராம்.


கே.பி.யின் மாற்றம் குறித்து இலங்கையின் தமிழ்ப் பிரதிநிதிகள் சிலரிடம் பேசினோம்.

" கே.பி.யின் நிலைப்பாடு என்னவென்று உறுதியாகத் தெரியவில்லை. கே.பி.பிடிபட்டு இத்தனை நாட்கள் ஆகியும் அரசுத் தரப்பு அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கொழும்பு விசுபாயவில் உள்ள ஆடம்பர வீட்டில் தங்கவைத்து, எல்லாவித வசதிகளையும் சிங்கள அரசு கே.பி.க்கு வழங்கி வருவதாகவும் ஒரு தகவல்.

கே.பி-யை வடமாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதன் மூலமாக, சர்வதேச சமூகத்தைத் திசைதிருப்ப ராஜபக்ஷ திட்டம் போடுகிறார். இதற்காக கே.பிக்கு பொதுமன்னிப்பு வழங்கும் ஏற்பாடுகளும் தீவிரமாக நடக்கின்றன. சிங்கள அரசின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல பகிரங்கமாகவே, 'கே.பி-க்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டால்... அதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை!' எனச் சொல்லி இருக்கிறார். இன்னமும் கே.பி.யை நம்பும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மூலமாக நிதி திரட்டும் திட்டமும் சிங்கள அரசுக்கு இருக்கிறது.

சர்வதேச அளவில் ஆயுதங்கள் வாங்கியது தொடங்கி, சொத்துப் பராமரிப்பு வரை முக்கியமான பலவேலைகளைப் புலிகளுக்காகச் செய்தவர் கே.பி.ஐந்து கப்பல்கள்,600க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குக் குறித்து அவரிடம் பல விடயங்களை சிங்கள அரசு விசாரித்து வருகிறது. அவரைஅரசுத்தரப்பு சாட்சியாக்கி, புலிகள் மீது மலைக்கவைக்கும் பழிகளை சிங்கள அரசு பரப்பப் போகிறது.அதற்காக வவுனியாவில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமுக்கு கே.பி. அழைத்துச் செல்லப்பட்டார். சந்தேகத்துக்கு இடமான புலிப் பிரமுகர்களை அவர் சந்தித்து இருக்கிறார்.கோத்தபாய ராஜபக்ஷவுடன் கே.பி. காட்டும் நெருக்கம் எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

சிங்கள அரசுக்கு இப்போது இரட்டைத் தலைவலியாக இருப்பது போர்க்குற்றப் புகார்களும், நாடு கடந்த தமிழீழ அரசு அமைப்பதற்கான முன்னெடுப்புகளும்தான்.கே.பி மூலமாகவே இந்த இருபிரச்சினைகளையும் சரிகட்டப் பார்க்கிறது சிங்கள அரசு. கருணாவுக்கு மாற்றாக பிரபாகரனால் நம்பிக்கையோடு நியமிக்கப்பட்ட கேணல் ராம் எப்படி சிங்கள அரசின் இயக்குதல் படி காட்டுக்குள் திரியும் புலிகளையும், சர்வதேச ஈழ ஆதரவாளர்களையும் குழப்புகிறாரோ... அதேபோல்தான் கே.பி.யும் சிங்கள அரசின் கைப்பிள்ளையாகி இருக்கிறார்" எனச் சொன்னவர்கள் கே.பி. பிடிபட்ட விடயத்தையும் சந்தேகத்தோடு பார்க்கிறார்கள்.



பிரபாகரன் திருமணத்தில் கே.பி...

" அமைதிக் காலத்திலேயே கே.பி.யுடன் பேசுவதோ, சந்திப்பதோ சாதாரண காரியம் இல்லை.

ஆனால், உக்கிரப் போர் முடிந்த தருணத்தில் சிங்கள அரசின் முழுக் கவனமும் கே.பி பக்கம் தான் திரும்பும் என்பது எல்லோருக்கும் தெரியும்.அந்தச் சூழலில் அவர் மலேசியாவில் பிடிபட்டதும் நம்புகிற செய்தியே இல்லை. பிரபாகரன் மரணம் குறித்து முதலில் இருக்கிறார் என்றும், பின்னர் இரங்கல் தெரிவிக்கச் சொல்லியும் ஈழ ஆதரவாளர்கள் எல்லோரையும் குழப்பினார்கே.பி.போரின் இறுதி நேரத்தில் புலிகளுடனும் சர்வதேசப் பிரதிநிதிகளுடனும் பேசி கே.பி. எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தார் என்கிற சந்தேகத்தையும் இப்போது தவிர்க்க முடியவில்லை!" என்கிறார்கள் அதிர்ச்சியைக் கூட்டி.

ஆனால்,கே.பி.யை உறுதியாக நம்பும் புலி ஆதரவுப் பிரமுகர்கள் சிலரோ, " சிங்கள அரசின் இரும்பு வலைக்குள் இருக்கும் கே.பி.யால் அரசுத்தரப்பை எதிர்த்து என்ன செய்யமுடியும்? எப்போதுமே யாராலும் நெருங்கமுடியாத அளவுக்கு எச்சரிக்கையாக இருக்கும் கே.பி சர்வதேச ஈழ ஆர்வலர்களை ஒன்று திரட்டத்தான் வெளியுலகுக்கு வந்தார். அதுதான் அவரைச் சிக்க வைத்தது. முள்ளிவாய்க்கால் போர் உக்கிரமானபோது தலைவர் பிரபாகரனைத் தப்பவைக்க அவர் எடுத்த முயற்சிகள் தற்போது நாடு கடந்த தமிழீழ அரசை அமைக்கப் போராடும் பிரதிநிதிகளுக்கு நன்றாகத் தெரியும்.

கடைசிக் கால கட்டத்தில் ஆயுதங்களை சேகரித்துக் கொடுக்கமுடியாமல் யாருடைய உதவிகளை எல்லாம் அவர் நாடினார் என்பதற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன.

தற்போது முகாம்களில் அடைக்கப்பட்டு இருக்கும் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட புலி உறுப்பினர்களை மீட்பதற்காகத்தான் அவர் சிங்கள அரசோடு இணக்கமாக இருக்கிறார் என்பது எங்களின் யூகம்! " என்கிறார்கள்.

திருப்போரூர் முருகன் கோயிலில் பிரபாகரன் - மதிவதனிக்குத் திருமணம் நடந்தபோது, மாப்பிள்ளைத் தோழனாக இருந்தவர் கே.பி. தோள் கொடுத்த தோழன் துரோகியா இல்லையா என்பது புலித்தலைவரின் மரணம் (?)போலவே புரிபடாத புதிர்தான்!

இரா.சரவணன்

**ஜூனியர் விகடன்**

# ஜப்பானியக் காதற் பாடல்களின் மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும் (4)



ஜப்பானிய அறிஞரான H.H Honda 1967 இல் மன்யோசுப் பாடல்கள் முழுவதையும் ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து வெளியிட்டார். Nakanishi Susmu என்பவரும் மன்யோசுப் பாடல்களை ஆங்கிலமொழியிலே பெயர்த்துள்ளார்.

அவருடைய முதல் தொகுதி 1978 இல் வெளியிடப்பட்டது. Jan Hideo Levy என்பவர் 1971 இல் மன்யோசுப் பாடல்களை மொழிபெயர்க்கத் தொடங்கி முதல் 906 பாடல்கள் கொண்ட தொகுதியை 1981 இல் வெளியிட்டார்.

1991 இல் ஜப்பானிய கந்த பல்கலைக் கழகப் பேராசிரியர் Suga Teruo என்பவர் மன்யோசுப் பாடல்கள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து மூன்று தொகுதிகளாக வெளியிட்டார்.

மன்யோசுப் பாடல்களின் மொழிபெயர்ப்பு தொடர்ந்தும் நடைபெற்றுள்ளது. சீன மொழியில் மன்யோசு மொழிபெயர்ப்பு 2007 இல் நடைபெற்றுள்ளது.

இம்மொழி பெயர்ப்பு முயற்சியில் ஜப்பானிய அறிஞர் களும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக் கது. இந்திய மொழிகளுள் தமிழ் மொழியில் மன்யோசுப் பாடல்களுள் ஒரு பகுதி மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையாசிரியர் கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ் தமிழில் மொழிபெயர்த்த 155 பாடல்கள் மன்யோசு என்னும் தலைப்புடைய நூலாக 1992 இல் சென்னையில் காந்தளகம் பதிப்பகம் வெளியிட்டது மேலும் இவர் மன் யோசு 10 ஆம் தொகுதியிலுள்ள 539 பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

இம் மொழி பெயர்ப்பு ஜப்பானியக் காதல் பாடல்கள் என்னும் நூலாக சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2000 ஆம் ஆண்டில் வெளியிட்டது.

**4. மொழிபெயர்ப்புத் தொடர்பான சிக்கல்கள்.**

மன்யோசுப் பாடல்களைப் பிறமொழியிலே பெயர்க்கும்போது பல சிக்கல்கள் எதிர் கொள்ளப்பட்டதை மொழிபெயர்ப்பாளர்கள் கூறியுள்ளனர். மன்யோசுப் பாடல்களின் அமைப்பு நிலையிலும் பொருள் நிலையிலும் மொழிபெயர்ப்பின் போது ஏற்படும் சிக்கல்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றை வருமாறு குறிப்பிடலாம்.

வடிவநிலையில்:

1.சொற்கள் , தொடர்கள் விடுபட்டுப் போதல். அவை பல வரலாற்றுச் செய்திகளைக் கொண்டவை என்பது மனங்கொள்ளப்பட வேண்டும்.

2.தலையணைச் சொற்களின் விளக்கம் விடுபடல்.

3.ஆட்பெயர்கள் , ஆண்-பெண் பெயர்கள், இடப்பெயர், பிரதேசப் பெயர் , பணி நிலை என்பன பற்றியவை.

4. 5-7 அசை அமைப்பு.

உணர்வுநிலையில்:

1.திரும்பத் திரும்ப வரும் தொடர்கள்

2.விசேடமான உணர்வுநிலைப் புலப்பாடு

3.ஜப்பானிய மொழிக்கேயுரிய சிறப்புச் சொற்கள்.

மன்யோசுவின் மூலபாடம் சீன வரிவடிவத்தில் எழுதப்பட்டிருப்பினும் ஜப்பானியச் சொல் நிலையிலேயே மொழி பெயர்க்க வேண்டியுள்ளது. இதற்கு ஜப்பானிய மரபுநிலையான சொற்களின் அறிவு இன்றியமையாதது. ஒலிக்குறிப்புச் சொற்கள், சிலேடைப் பொருள்தரும் சொற்கள், இரட்டைக் கிளவிகள், அடுக்குத் தொடர்கள் எனப் பல்வேறுபட்ட சொற்கள் பற்றிய தெளிவின்மை சிக்கலை ஏற்படுத்தும்.

சிறப்புச் சொற்றொடர்கள் , பருவகாலச் சொற்கள் பற்றிய தெளிவான விளக்கமின்மை குழப்பத்தை ஏற்படுத்தும். பண்பாட்டு நிலையில் உணர்வு நிலைகள் விளக்கமற்றிருப்பதால் பாடவேறுபாடுகள் தோன்றியுள்ளன. கூற்றுக்களை இனங்காண முடியாமையால் பொருள் வேறுபாடு தோன்ற வாய்ப்பேற்படும். பயன்படுத்தப்பட்ட பழமொழிகளும் பிரதேச வழக்குச் சொற்களும் சரியான முறையில் விளங்கிக் கொள்ள இயலாத தன்மையும் மொழி பெயர்ப்பாளரிடம் ஏற்படுவதுண்டு.

பிற மொழியாளரின் பார்வையில் மன்யோசுப் பாடலின் சூழலை விளங்கிக் கொள்ள முடியாத தன்மையும் குறிப்பிடத்தக்கது. பாடல்களுக்குப் பிற்காலத் தில் எழுதப்பட்ட உரைவிளக்கக் குறிப்புகளில் வேறுபாடிருப்பதும் மொழி பெயர்ப்பில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இக்கட்டுரை யாளர் தமிழிலே மொழி பெயர்ப்புச் செய்யும் போது இச் சிக்கல்களை எதிர் கொண் டுள்ளார்.

**5. சிக்கல்களுக்கான தீர்வுகள்**

மேற்படி இனங்காணப்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டியவை. ஆனால் அதற்குரிய வழிவகைகள் தெளிவுபடுத்தப்பட வேண்டியவை. ஜப்பானிய மொழியில் அமைந்த மன்யோசுப் பாடல்களைப் பிறிதொரு மொழியிலே மொழிபெயர்ப்புச் செய்வதற்கு ஜப்பானிய மொழியறிவு இன்றியமையாதது. மன்யோகந வரிவடிவில் எழுதப்பட்ட மூலவடிவத்தைப் படிப்பது மிகக் கடினமானது.

ஆனால் பின்னர் ஜப்பானிய வரிவடிவத்தில் எழுதப்பட்ட பாடல்களைப் படிக்க முடியும். அப்பாடல்களை 5-7 அசை கொண்ட அடி அமைப்பிலே மொழி பெயர்ப்பைச் செய்வதே நன்று. அவ்வாறு அமைக்கும் போது சொற்களையும் , சொற்றொடர்களையும் , இடைச்சொற்களையும் தெளிவாக மொழிபெயர்ப்புச் செய்யமுடியும். தமிழ் மொழியிலே மொழி பெயர்ப்புச் செய்யும் போது இத்தகைய அமைப்பிலே செய்ய முடிந்தமை குறிப்பிடத்தக்கது. பின்வரும் பாடல் மொழி பெயர்ப்பை எடுத்துக்காட்டாகத் தரலாம்.

FARU GASUMI வேனில் புகார்
NAGARURU NABENI கழிந்திடும் போதிலே
AWO YAGI NO பசும் யகியின்
YEDA KUFI MOTTE கிளைச்சுள்ளி கவ்வியே
UGUVISU NAKU MO உகுவிசு நரலும்.

ஜப்பானிய மொழிக்கேயுரிய சிறப்புப் பெயர்களை அப்படியே மொழிபெயர்ப்பது நன்று. இடைச் சொற்களையும் ஏற்ற வகையில் இணைப்பது பொருள் தெளிவைத் தரும். தமிழ் மொழியின் இடைச்சொற்களுக்கும் ஜப்பானிய மொழி இடைச்சொற்களுக்கும் ஒற்றுமையிருப்பதால் மொழி பெயர்ப்பிலும் சிக்கல் இல்லை.

கூற்றுநிலையை விளங்கிக் கொள்வதற்குத் தொல்காப்பியரது அகத்திணை மரபு பற்றிய விளக்கம் பெரிதும் உதவும். பாடல்களின் உணர்வு நிலையைத் தெளிவாக விளங்கிக் கொள்ளவும் தமிழிலக்கண மரபு வாய்ப்பாகவுள்ளது.

சிறப்பாகச் சங்க இலக்கியப் புலமையறிவு மன்யோசுப் பாடல்களை மொழி பெயர்ப்பதற்குப் பெரிதும் துணை செய்யும். பாடலின் குறியீட்டுப் பொருளையும் உணர்வுநிலையையும் இனங்கண்டு கொண்டால் பொருளமைதி தொடர்பான சிக்கல்கள் ஏற்படா. ஜப்பானியப் பண்பாட்டு நடைமுறை தொடர்பான செய்திகளையும் நன்கு விளங்கிக்கொண்டே மொழிபெயர்ப்பைச் செய்ய வேண்டும்.

(முற்றும்)

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
முன்னாள் ஆய்வாளர், கக்சுயின் பல்கலைக்கழகம்,
டோக்கியோ, ஜப்பான்.

## அப்துல் காதருக்கு எதிரான வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளத் திட்டம்?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் காதருக்கு எதிரான வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ள அரசாங்கத்தரப்பு சட்டத்தரணிகள் ஆலோசனை செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரட்டைக் கொலைகளுடன் அப்துல் காதர் தொடர்பு பட்டிருப்பதாகத் தெரிவித்து கண்டி உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

இந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வது தொடர்பில் சட்டமா அதிபருடன் ஆலோசனை செய்யப்பட்டு வருவதாக அரசாங்கத் தரப்பு சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

குறித்த இரட்டை கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ளன.

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் இருவர் கொல்லப்பட்டதாகவும், இந்தச் சம்பவத்துடன் அப்துல் காதருக்கு தொடர்பு இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கு இடையில் நடைபெற்ற மோதலின் போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தற்போதைய ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கு தொடர்பு இருப்பதாகவும், அரச தரப்பு பிரதான சாட்சியாக பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சாட்சியமளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் அப்துல்காதருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## இலங்கைத் தமிழரைக் கடத்தி கப்பம் பெற்றவர் கைதானர்

(கொழும்பு)

பிரித்தானியாவில் குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழர் ஒருவர் விடுமுறையில் சென்னை வந்தபோது அவரைக் கடத்திச் சென்று அவரது மனைவியிடம் ரூ.17.5 இலட்சம் பணத்தைப் பறித்த குழுவினரை சென்னை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரித்தானியாவிலிருந்து விடுமுறையைக் கழிப்பதற்காக சென்னை வந்திருந்த அவர் கடந்த யூன் மாதம் 22 ஆம் திகதி காரில் திருவல்லிக்கேணிக்கு சென்று கொண்டிருந்த போது , முச்சக்கர வண்டியில் வந்த சிலர் வழி மறித்து கடத்திச் சென்று ஒரு வீட்டில் 2 நாட்கள் அடைத்து வைத்து பணம் கேட்டு மிரட்டியுள்ளனர்.

அவரைக் கடத்தி ரூ.25 இலட்சம் பணம் கேட்டு மிரட்டியதும் பின்னர் பல்லாவரத்தில் வைத்து அவரது மனைவியிடம் இருந்து ரூ.17.5 இலட்சத்தை பெற்றுக் கொண்டு அவரை விடுவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக குறித்த நபர் கொடுத்த புகாரின் பேரில் பொலிஸார் மேற்படி குழுவினரைக் கைது செய்துள்ளனர். (6)

## சுற்றுலா விசாவை பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட 12 பேர் கைது

(கொழும்பு)

சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி இலங்கைக்கு வருகை தந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட மேலும் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கல்முனை நகரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் வில்லியம் தேவேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்ட இருவரிடம் விசாக்கள் இருக்கவில்லை எனவும் ஏனையோரிடம் சுற்றுலா விசாக்களே இருந்ததெனவும் தெரியவருகிறது. (6-4)

## மட்டக்களப்பில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள்

### பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு


(கொழும்பு)

மட்டக்களப்பில் பல அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பயங்கரவாதத் தாக்குதல்களினால் ஸ்தம்பிதமடைந்திருந்த நெற் செய்கையை ஊக்கப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தமது வேண்டுகோளுக்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 40 மில் லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)

# வெங்காயத்தில் பீடைகளும் அவற்றினது முகாமைத்துவமும்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

**விதை நேர்த்தி**

விதை வெங்காயத்திற்கு விதை நேர்த்தி செய்வதன் அவசியம் பற்றியும் விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டதன் படி பூஞ்சண நாசினிகளால் விதை நேர்த்தி செய்வது பற்றியும் சென்ற வாரம் விரிவாகப் பார்த்தோம். இதன் தொடர்ச்சியாக இனி நன்மை தரும் நுண்ணங்கி கரைசலால் விதை நேர்த்தி செய்வது பற்றி ஆராய்வோம்.

**ரைக்கோடேர்மா என்னும் நன்மை தரும் நுண்ணங்கி...**

நல்ல நண்பர்கள், ஒருவருடைய வாழ்க்கைக்கு பக்கபலமானவர்கள் என்று கூறுவார்கள். நல்ல நண்பர்களை எம்மைச் சூழ அழைத்துக் கொண்டால், அமையப் பெற்றால் தீங்கு செய்ய நினைப்பவருக்கு வாய்ப்பேயில்லாது போய்விடும். இது தாவரங்களுக்கும் அவற்றினது வளர்ச்சிக்கும் நன்றே பொருந்தும். எமது விளைநிலம் நன்மை தருவன, தீங்கு விளைவிப்பன என பலதும் பத்தையும் கொண்ட ஒரு ஊடகம் எனலாம்.

இந்த நிலத்திலே பயிர்செய்ய விளையும் போது நன்மை தரும் நுண்ணங்கிகள் ஒரு பக்கத்தில் பயிருக்கு உதவிடும் போது அதற்கும் மேலாக இன்னொரு பக்கத்தில் பல்கிப் பெருகியிருக்கும் தீங்கு விளைவிக்கும் நுண்ணங்கிகள் பயிரை அழிப்பதில் அதிலும் பயிரினது நிலக்கீழ்ப்பகுதிகளான வேர்ப்பகுதியில் சேதத்தை விளைவித்து தன்னினத்தை விரைந்து பெருக்க தலைப்பட்டு விடும்.


பொதுவாகவே தீங்கு விளைவிப்பவர்களை அதிகளவில் கொண்டிருப்பதாலும் அதற்கான சூழல் நிறைந்து காணப்படுவதனாலும் தீங்கு விளைவிப்பவர்களின் ஆதிக்கம் சிறந்து விளங்குவதாலும் விளைநிலத்தில் பயிர்ச்செய்கை செய்யும்போது விதையிட்ட முதலிலிருந்தே பயிர்கள் தீமை செய்யும் நுண்ணங்கிகளால் பாதிப்பையோ, அச்சுறுத்தலையோ எதிர்நோக்கியிருக்கும்.

இந்த அச்சுறுத்தலையும் பாதிப்பையும் தவிர்க்க வேண்டுமாயின் விதையைச் சுற்றி நல்ல நுண்ணங்கிகளை சேர்த்து விட வேண்டும். இவை ஒரு தற்காலிக காப்பரண்களாக தொழிற்படும். இந்த நல்லநுண்ணங்கிகளுள் ஒருவகைதான் ரைக்கோடேர்மா என்னும் பூஞ்சணமும் சூடோமோனசு புளோரெசன்சு எனப்படும் பக்ரீறியாவும். இவை மண்ணில் அதிக எண்ணிக்கையில் இல்லாத காரணத்தினால் விதை வெங்காயக் குமிழ்களை நடவு செய்ய முன்பு விதை நேர்த்தி செய்யும் செயற்பாட்டில் நல்ல பூஞ்சண கலவையினுள் அமிழ்த்தி நடுகை செய்கிறோம்.

எனவே நோய், பூச்சி பீடைத் தாக்கத்திலிருந்து பயிர்களை நடவு செய்த ஆரம்பத்தில் காப்பாற்ற விதை நேர்த்தி செய்வது எப்போதும் நல்ல பயனையே தரும்.

**மண்ணில் வாழும் நன்மை தரும் நுண்ணங்கிகள்**

வீடு ஒன்றைக் கட்டுவதற்காக அத்திவாரமானது, நேர்த்தியாகவும் பலமானதாகவும் அமையப் பெறவேண்டும். அதுபோல பயிரிலிருந்து வளரவும் வேண்டும். இவ்வாறு முளைத்தது நல்ல பயிராகினும் சுற்றுச் சூழல் நன்றாக இருந்தேயாக வேண்டும்.



இங்கே குறிப்பிடும் சுற்றுச் சூழலில் அதாவது மண்ணில் நல்ல நுண்ணங்கிகள் இருத்தல் அவசியம்.

மண்ணில்வாழும் நன்மை தரும் நுண்ணங்கிகளின் அரவணைப்பு என்றுமே பயிரின் வேருக்கு தேவை. விளைநிலத்தில் நல்ல நுண்ணங்கிகளின் எண்ணிக்கை கணிசமான அளவிலேயே இருப்பதனால் இவ்வகையான நுண்ணங்கிகளை மேலும் பெருக்கி விதைநேர்த்தி செய்வதன் மூலம் விதை வெங்காயத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்படுவதுடன் விதை வெங்காயத்தின் வளர்ச்சிக்கு இந் நுண்ணங்கிகள் என்றும் உறுதுணையாகவும் இருக்கும்.

இதனையே விதை நேர்த்தி என வழக்கப்படுத்திக் கொள்கின்றோம். ரைக்கோடேர்மா எனும் பூஞ்சணம் வழமைக்கு மாறான செயல் வடிவமுள்ளது. இதனுடன் சூடோமோனசு புளோரெசென்சு ஆகிய பக்ரீறியாவின் செயற்பாடும் இதையொத்ததாகவே இருக்கும்.

விதை நேர்த்தி என்பது வருமுன் காப்பது போன்றது. ஆதலால் நல்ல பயிர்ச்செய்கை என்பது விதை நேர்த்தி செய்து செய்யப்படும் பயிர்ச்செய்கை முறை என்பதனை விளங்கிக் கொள்ளுங்கள். விதை நேர்த்தி செய்யாது செய்கை பண்ணப்படும் பயிர்களில் வேர்ப்பகுதிகளில் நோய் ஏற்படும் போது அதனைக் கட்டுப்படுத்தல் என்பது இலகுவான காரியமல்ல.

இந்நிலையில் விவசாய விரிவாக்க உத்தியோத்தர்களாலும் இன்னும் விவசாய ஆராய்ச்சியாளர்களாலும் எதுவுமே செய்ய முடியாது. இது உடனடி நிவர்த்திக்கு அப்பாற்பட்ட செயலாகிவிடும்.

**ரைக்கோடேர்மாவை எங்கு எப்படி பெறுவது**

ரைக்கோடேர்மா என்னும் நன்மை தரும் பூஞ்சணத்தினை விருத்தி செய்வது பற்றிய ஆய்வுகள் விவசாய உயிரியல் துறையில் நிறையவே நடைபெற்றுள்ளன. இதன்மூலம் இதனை எங்கள் மனையில் சமையலறைக்கழிவான பிழிந்த தேங்காய்ப்பூவை ஊடகமாக்கி இன்னும் நெல்லின் மேலும் வளர்த்துக்கொள்ளும் எளிய தொழில் நுட்பம் கைவசமுண்டு. இந்த எளிய தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி நீங்களும் உற்பத்தி செய்து கொள்ளலாம்.

இது பற்றிய விளக்க கருத்தரங்குகளும் நிறையவே நடாத்தப்பட்டுள்ளன. இன்னும் இதுபற்றி நேரடியாகவே தெரிந்து கொள்ள விரும்புவர்களுக்கு விவசாய உயிரியல் துறையின் கதவுகள் என்றுமே திறந்திருக்கின்றது. ரைக்கோடேர்மாவினை கிராமிய மட்டத்தில் உற்பத்தி செய்துகொள்வதும் இதனது பயன்பாட்டை மேலும் விருத்தி செய்து கொள்ள உதவும். குறிப்பாக கிராம மட்ட நிறுவனங்களாகிய வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம், மகளிர் சங்கங்கங்கள், விவசாயிகள் ஒன்றியங்கள் இது விடயத்தில் கரிசனை செலுத்தலாம். வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய எளிமையான சிறந்த ஆய்வுகூடம் இதற்கொரு முன்னுதாரணமாகும். விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினது குறிக்கோள்களிலொன்றான பல்கலைக்கழகத்திலிருந்து கிராமத்தை நோக்கிய தொழில்நுட்பம் என்னும் செயல் வடிவத்தினுள் விவசாய தொழில் நுடபத்தினை எளிமையாக்கி, இலகுவாகன தாக்கி மிகவும் குறைந்த செலவில் எங்களூர் விவசாயிகளும் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தரம் கற்றவர்களும் தெரிந்து பயன் படுத்தும் வகையில் ஆய்வுமூலம் கண்டு பிடித்திருக்கிறோம். இதில் விவசாய பீட மாணவர்கள், தொழில்நுட்ப, ஆய்வுகூட இன்னும் அனைத்து மட்ட ஊழியர்களுடன் விரிவுரையாளர்கள் அனைவரினதும் ஆக்கபூர்வமான ஆய்வுகள் பங்களித்துள்ளன. நீண்டகால ஆய்வுகளின்பெறுபேறுகளிவை. விஞ்ஞான பீடத்தினது தாவரவியல்துறையினதும் திருநெல்வலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தினதும் பங்களிப்பும் இதில் நிறையவே உண்டு. மேலும் இத்தகைய தொழில் நுட்பத்தினை ஆரம்ப காலத்தில் பரீட்சித்துப் பார்ப்பதிலும் இன்னும் இதுபற்றிய அறிவினை விவசாய பெருமக்களுக்கு தொடர்ந்து வழங்குவதிலும் விவசாயத் திணைக்களத்தினது விரிவாக்க உத்தியோகத்தர்களது பங்கும் அளப்பரியது. இப்படியான விஞ்ஞான ஆய்வு முடிவுகளைப் பற்றி அறிந்தும் தெரிந்தும்கூட அவ்வப்போது இவற்றை செய்யாது போகும்போது மண்ணினுள் வேர்ப் பகுதிகளில் ஏற்படும் நோய்த் தாக்கத்தை எவரலாலும் விரைந்து கட்டுப்படுத்த முடியாது போய்விடும்.

11-IV

**பயிர் பாதுகாப்பு என்பது ஒரு கூட்டு முயற்சி**

எங்களூர் விவசாயத்தில் ஏற்படும் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒருகுடையின் கீழாக நடைமுறைப்படுத்தப்படும் ஒரு கூட்டு முயற்சியாகவே எண்ணுதல் வேண்டும். கருத்து வேறுபாடுகளைக் களைந்து எங்களூர் விவசாயியையும் விவசாயத்தையும் காப்பாற்றும் பொறுப்புடன்மேலும்விருத்தி செய்யும் பொறுப்பும் எங்களனைவருக்குமுண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கான காலம் கனிந்துவருவதை வடக்கின் வசந்தம் நிச்சயமாக உணர்த்தும். நிச்சயம் இது நடந்தேறும் என்ற கனவு இக்கட்டுரையை எழுதும் இக்கைகளுக்கு என்றுமுண்டு. இதுவரை எழுதுவதை இக்கைகள் நிறுத்தமாட்டா. (தொடரும்)

## உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அமர்வுகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

யுத்தகாலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அமர்வுகள் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மையத்தில் இந்த அமர்வுகள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் மக்களிடம் விசாரணைகளை நடத்த உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு உத்தேசித்துள்ளது.

சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் வடக்கு- கிழக்கிற்கு விஜயம் செய்யவுள்ளதாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் சட்டமா அதிபர் சீ. ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார். (6-4)

## கொக்குவில் இந்துவின் மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு எழுச்சி விழாவினை முன்னிட்டு நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு 8 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

மாலை 12 முன்பள்ளிகளின் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியும் இடம் பெறவுள்ளது. (ச-9)

## ஐ.நா.பக்கச்சார்பான முறையில் செயற்பட்டு வருகின்றது

### பாலஸ்தீன அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பு பக்கச் சார்பான முறையில் செயற்பட்டு வருவதாக பாலஸ்தீன அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் உள்விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் தலையீடு செய்யக்கூடாதென இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் டாக்டர் அன்வர் அல்கா தெரிவித்துள்ளார்.

பிரதமர் டி.எம்.ஜயரட்னவை சந்தித்தபேது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனம் மீது கொடூரமான தாக்குதல்களை நடத்தியபோது ஐக்கிய நாடுகள் அமைப்பு, எவ்வித கருத்துக்களையும் வெளியிடாது மௌனம் காத்துவந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு பக்கச் சார்பாக செயற்படுகின்றமைக்கு இதுவே சிறந்த உதாரணம் எனவும் இஸ்ரேல் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பாலஸ்தீனம் உத்தியோகபூர்வமாக கோரிய போதிலும், இதுவரையில் அதற்கான பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அழுத்தங்களுக்கு எதிராகப் போராடும் இலங்கையின் முயற்சிகளுக்கு, பாலஸ்தீனம் பூரண ஆதரவளிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (6-4)

# வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்த ஆயிரத்து 38 பேர் மீள் குடியேற்றம்

இடம்பெயர்ந்த 1038 பேர் முல்லைத்தீவு மாவட்டத்தின் மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் நேற்று முன்தினம் மீள் குடியேற்றப் பட்டனர்.

போர்ச் சூழல் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த 350 குடும்பங்களைச் சேர்ந்த 1038 பேர் கரைத் துறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் நேற்று முன்தினம் மீள்குடியேற்றப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தெரிவித் துள்ளது.

ஒருவருடத்திற்கு மேலாக வவுனியா நலன் புரி முகாம்களில் தங்க வைக்கப் பட்டிருந்த இவர்கள் விசேட பஸ்கள் மூலம் அழைத் துச் செல்லப்பட்டு சொந்த இடங்களில் மீள்குடி யமர்த்தப்பட்டுள்ளனர்.

கரைத்துறைப் பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள அலம்பில் வடக்கு, அலம்பில் தெற்கு மற்றும் செம்மலை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இவர்கள் மீள்குடி யேற றப்பட்டதாக மாவட்ட திட்டப் பணிப்பாளர் எஸ். ஸ்ரீரங்கன் கூறினார். (6)

# கிளிநொச்சி நீதிமன்றத்தின் புனர்நிர்மாண நடிவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

## அமைச்சர் அதாவுட செனவிரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி நீதிமன்றத்தின் புனர்நிர் மாண நடவடிக்கைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் புதிதாக 66 நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளதாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் குறிப் பிடுகையில் ,

புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளி யிடப்படுமெனவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் ஐந்து உயர் நீதி மன்றங்கள் புதிதாக நிர்மாணிக்கப்படவுள் ளதுடன் அவற்றின் எண்ணிக்கை 33 ஆக வும் அதிகரிக்கவுள்ளது இதில் யுத்தத்தின் போது சேதமாக்கப்பட்ட கிளிநொச்சி நீதிமன்றத் தின் புனர் நிர்மாண நடவடிக்கைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை வழக்குகள் தாமதமாவதை தவிர்க்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளதுடன் அதற்கான ஓய்வு பெற்ற நீதவான் களின் ஒத்துழைப்புடன் மேலதிக நீதிமன்றங் கள் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள் ளது. (6)

# அனோமா தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜென ரல் சரத் பொன்சேகா இராணுவச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட் டுள்ளமைக்கு எதிராக அவரது மனைவி அனோமா பொன்சேகா தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீதான விசாரணைகளை நேற்று முன்தினம் விசா ரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன் றம் அதனை எதிர்வரும் செப்டம்பர் 27 ஆம் திகதிக்கு ஒத்துவைத்தது.

பிரதம நீதியரசர் அசோக என். சில்வா தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழு முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த மனு மீதான விசாரணை நடைபெற் றது.

மனுதாரர் தரப்பின் குற்றச்சாட்டுக்கள் இதுவரை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளுக்கு கிடைக்கவில்லை என பிரதி வாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இதன் போது வாதிட்ட மனுதாரின் சட்டத் தரணி சிபிலி அசீஸ் அவற்றை அஞ்சலில் அனுப்பியுள்ளதாக குறிப்பிட்டார்.

இதனையடுத்து பிரதம நீதியரசரின் அறி விப்புக்கு சட்டத்தரணிகளிடம் நீதிமன்றத்தில் பகிரங்கமாக கையளிக்கப்பட்டது.

இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய, மேஜர்ஜெனரல்சுமித்மாணவடு, பாதுகாப்புச்செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவக் காவற்துறையின் தலைமை அதிகாரி பிரி கேடியர் விஜயசிறி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப் பிடப்பட்டுள்ளனர். (6)

# சுமார் 300 வருடங்கள் முன்னரான தொல்பொருள் கட்டடங்கள் கண்டுபிடிப்பு

வாகரை,காயங்கேணி அடர்ந்த காட்டுக் பகுதிக்குள் இருந்து சுமார் 300 வருடங் களுக்கு முன்னர் வாழ்ந்த பண்டைய மன் னர்களின் கட்டடங்களின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து குறித்த பிரதேசம் புராதன தொல்பொருள் வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் அப் பிர தேசம் தொல்பொருள் ஆய்வுத் திணைக் களத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருடர்கள் இருவர் அப்பகுதியில் புதையல் தோண்டிய போதே இந்தப் பண்டைய கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத னையடுத்து அவை தொடர்பில் ஆய்வு செய் வதற்கு இலங்கை தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் குழு நேற்று முன்தினம் குறித்த பிரதேசத்திற்கு விஜயம் செய்தனர்.

இதில் அகழ்வாராய்ச்சி திணைக்கள பொலநறுவை பிராந்திய பொறுப்பாளர் நளின் வீரரத்ன தலைமையிலான உயர் மட்டக்குழுவினர் மேற்படி தொல்பொருள் கட்டடங்கள் தொடர்பில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து குறித்த தொல்பொருள் கட்டடங்களானவை சுமார் 300 வருடங்க ளுக்கு முன்னர் வாழ்ந்த பண்டைய மன்னர் களின் கட்டடங்கள் என ஆய்வாளர்களால் உறுதி செய்யப்பட்டன.

படையினர்,பொலிஸார் மற்றும் வாகரை பிரதேச செயலாளர் செல்வி.எஸ். இராகுல நாயகி உட்பட பல அதிகாரிகளும் இதன் போது கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (6)

# 10.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 988- டப்ளின் நகரம் அமைக்கப்பட்டது.
- 1460-வோர்விக் துணைநிலை மன்னர் ரிச்சார்ட் நெவில்,இங்கிலாந்தின் ஆறாம் ஹென்றி மன்னரின் படைகளை நோர்த்தாம்ப்டன் நகரில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்து மன்னரைச் சிறைப்பிடித்தான்.
- 1553-லேடி ஜேன் கிறே இங்கிலாந்தின் அரசியாக முடி சூடினாள்.
- 1778-அமெரிக்கப் புரட்சி:பிரான்சின் பதினாறாம் லூயி பிரித்தானியர் மீது போரை அறிவித்தான்.
- 1796-ஒவ்வொரு நேர் முழு எண்ணும் அதிகபட்சம் மூன்று முக்கோண எண்களின் கூட்டுத்தொகையாகக் கொடுக்கலாம் என்பதை கார்ல் ஃப்ரெடெரிக் காஸ் கண்டுபிடித்தார்.
- 1806-வேலூர் சிப்பாய் எழுச்சி:தமிழ்நாட்டில் வேலூர்க் கோட்டையில் நிகழ்ந்த எழுச்சியில் நூற்றுக்கணக்கான ஆங்கிலப் படையினர் கொல்லப்பட்டனர்.
- 1890-வயோமிங் ஐக்கிய அமெரிக்காவின் 44 ஆவது மாநிலமாக சேர்க்கப்பட்டது.
- 1909-ஜெர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் சேவைக்கு விடப்பட்டது.
- 1925-சோவியத் ஒன்றியத்தின் செய்தி நிறுவனம் டாஸ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1925-இந்திய ஆன்மீகத் தலைவர் மெஹெர் பாபா இறக்கும் வரையான (44 ஆண்டுகள்) மௌன விரதத்தை ஆரம்பித்தார்.இந்நாள் அமைதி நாளாக அவரின் பக்தர்களால் கொண்டாடப்படுகிறது.
- 1941-இரண்டாம் உலகப்போர்:போலந்தின் ஜெட்வாப்னி நகரில் நூற்றுக் கணக்கான யூதர்கள் நாசி ஜெர்மனியரினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1951-கொரியப் போர்:அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பமாகின.
- 1958-அலாஸ்காவில் மிகப்பெரும் சுனாமி அலை (524 மீற்றர் உயரம்) பதியப்பட்டது.
- 1962-உலகின் முதல் தொலைத்தொடர்பு விண்கலமான டெல்ஸ்டார் விண்ணில் ஏவப்பட்டது.
- 1973- பங்களாதேஷை அங்கீகரிக்கும் தீர்மானம் பாகிஸ்தான் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டது.
- 1973-பஹாமாஸ் பொதுநலவாயத்தின் கீழ் முழுமையான விடுதலை அடைந்தது.
- 1978-மௌரித்தானியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து ஜனாதிபதி மொக்தார் டாடா பதவியிழந்தார்.
- 1991-தென்னாபிரிக்க துடுப்பாட்ட அணி பன்நாட்டு துடுப்பாட்ட வாரியத்தில் மீண்டும் சேர்க்கப்பட்டது.
- 1991-யாழ்ப்பாணம் ஆனையிறவு இராணுவத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் போர் தொடுத்தனர்.
- 1992-போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல குற்றங்களுக்காக முன்னாள் பனாமாத் தலைவர் மனுவேல்நொரியேகா புளோரிடாவில் 40 ஆண்டுகால சிறைத்தண்டனை பெற்றார்.
- 2006-இந்தியாவில் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து இன்சாட்-4 செயற்கைக் கோளை ஏற்றிச் சென்ற ஜி.எஸ்.எல்.வி.விண்கலம் இயந்திரக் கோளாரினால் கடலில் வீழ்ந்தது.


### பிறப்புகள்

- 1925-மகத்திர் மொகமட்,மலேசியப் பிரதமர்.
- 1949-சுனில் கவாஸ்கர்,இந்தியத் துடுப்பாட்ட வீரர்.

### இறப்புகள்

- 1990-காந்தரூபன், விடுதலைப்புலிகளின் கரும்புலிகளில் ஒருவர்.(பி.1971)
- 2000-நாவேந்தன்,ஈழத்து எழுத்தாளர்.(பி.1932)

**1212-லண்டன் நகரின் பெரும் பகுதியை தீ அழித்தது.**



# துடிக்கும் போதே இதயத்தில் பைபாஸ் அறுவை சிகிச்சை

(மதுரை)

மதுரை செல்லூரை சேர்ந்த சுப்பிரமணி (54)எனும் கூலித்தொழிலாளிக்கு கடந்த 3 மாதத்துக்கு முன்பு நெஞ்சு வலி ஏற்பட்டது. இதையடுத்து இவர் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இவருக்கு ஆஞ்சியோ உட்பட பல்வேறு சோதனைகள் செய்தபோது இடது இதய இரத்தக் குழாயில் அடைப்பு இருந்தது தெரிய வந்தது. இதனால் உடனடியாக பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு டாக்டர்கள் ஏற்பாடு செய்தனர்.

நேற்று முன்தினம் காலை இதய அறு வை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் சுப்பிரமணியம் ரத்தினவேல், ஆசிக் மயக்கவியல் துறை தலைவர் சந்திரசேகர் , டாக்டர் கணேஷபாபு ஆகியோர் கொண்ட குழு பைபாஸ் அறுவை சிகிச்சையை தொடங்கினர். 2 மணி நேரம் நடந்த இந்த சத்திரசிகிச்சை வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டது. தற்போது நோயாளி நலமுடன் உள்ளார்.

இது குறித்து மருத்துவமனை கண்காணிப்பாளர் சிவக்குமார், டாக்டர் சந்திரசேகர் ஆகியோர் கூறியதாவது,

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் துடிக்கின்ற இதயத்தில் பைபாஸ் அறுவை சிகிச்சைசெய்தது இதுவேமுதல்முறை. கடந்த 2002 ,2003 ஆம் ஆண்டுகளில் டில்லி, மும்பை ஆகிய நகரங்களில் இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அதற்குப்பின் 2006, 2007 ஆம் ஆண்டுகளில் சென்னை, மதுரை தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே துடிக்கின்ற இதயத்தில் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இனி வாரம்தோறும் இது போன்ற அறுவை சிகிச்சை நடைபெறும் என்று அவர்கள் கூறினர். (6)

# விடுதலைப்புலி உறுப்பினர் கைது

(கொல்லம்)

கேரள மாநிலம் கொல்லத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த சிவா பராபரன் வயது (36) கேரள பொலிஸாரால் கைது செய்யப்படடுள்ளார்.

அவர் ஆள்கடத்தல் வழக்கில் தொடர்புடையவர் என்பது விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் தமிழகத்தைச் சேர்ந்த டென்னிசன் மற்றும் அந்தோனி ஆகிய இருவரை பொலிஸார் கேரளத்தில் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் இருவரும் தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை கேரளத்துக்கு அழைத்து வந்து திருட்டுத்தனமாக படகு மூலம் அவுஸ்திரேலியா அனுப்ப திட்டமிட்டிருந்தனர் எனவும் மேலும் அவர்களிடம் நடத்திய விசாரணையில் இலங்கைத் தமிழர்களை வெளிநாடுகளுக்கு திருட்டுத்தனமாக அழைத்துச் செல்வதில் முக்கிய பங்காற்றியவர் பராபரன் என்பது தெரியவந்ததாகவும் இதையடுத்து பொலிஸார் அவரை கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படும் இலங்கைத் தமிழர்கள் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை உயிர்ப்பிப்பதற்கான நடவடிக்கையில் பராபரன் ஈடுபட்டுவந்ததாக கேரள பொலிஸார் தெரிவித்தனர். (6)




## கடத்திய பொலிஸை விடுவிக்க மாவோயிஸ்டுகள் நிபந்தனை

ஒரிசா மாநிலத்தில்கடத்தப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டரை விடுவிக்க மாவோயிஸ்டுகள் நிபந்தனை விதித்துள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரிசா மாநிலத்தில் மாவோயிஸ்டுகள் நடத்திய முழு அடைப்பு போராட்டத்தின் போது கடந்த புதன்கிழமை அங்குள்ள காவல் நிலையம் ஒன்று தாக்கப்பட்டது.சம்பவத்தில் 2 பேர் பலியாகினர்.அப்போது அங்குள்ள உதவிப் பொலிஸ் அதிகாரி உமேஷ்சந்திர மராண்டி என்பவரை மாவோயிஸ்டுகள் கடத்திச் சென்று விட்டனர்.

எனினும் அவர் எங்கிருக்கிறார் என்பது குறித்து தகவல் எதுவும் தெரியாமல் இருந்த நிலையில் அவரை விடுவிப்பதற்கு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பழங்குடியினர் 68 பேரை விடுதலை செய்ய வேண்டும் என மாவோயிஸ்டுகள் நிபந்தனை விதித்துள்ளனர்.அதனை தொலைபேசி மூலம் செய்தி நிறுவனங்களிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (6)

# நாம் தமிழர் இயக்கம் சார்பில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கை போர்க்குற்றத்தை விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட ஐ.நா. நிபுணர் குழு விவகாரத்தில் இந்தியா மௌனம் சாதித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ள சீமான், இலங்கைக்கு துணைபோகும் நாடுகளைக் கண்டித்து இன்று 'நாம் தமிழர் இயக்கம்' சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் வெளியிட்ட அறிக்கையில் தெரியவருவதாவது, இலங்கையின் போர்க்குற்றங்களை ஆராயப் பான்கீ மூன் நியமித்த நிபுணர் குழுவை உலகமெங்கும் உள்ள மனித உரிமை ஆர்வலர்களும்,இன விடுதலைக்காகப் பேராடும் அமைப்புக்களும்,வரவேற்றுள்ள போதிலும் பெயரளவில் அரசியல் பேசும் ரஷ்யா,சீனா உள்ளிட்ட 29 நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்தியா இது குறித்து கருத்து ஏதும் தெரிவிக்காமல் மௌனம் சாதிக்கின்றது.

அதிநவீன ரேடார்கள், உளவு பார்க்கும் கருவிகள், ரோந்துக் கப்பல்கள் உட்பட எண்ணற்ற ஆயுதங்கள் தமிழர்களைக் கொன்றொழிக்க இலங்கைக்கு இந்தியா வழங்கியிருந்தது. தமிழர்களுக்கு எதிரான போரால் தடைசெய்யப்பட்ட 500 மில்லியன் டொலருக்கு மதிப்புள்ள கொத்துக்குண்டு மற்றும் இரசாயன ஆயுதங்களை ரஷ்யா இலங்கைக்கு போர் காலத்தில் விற்பனை செய்துள்ளது.

சீனாவோ இந்தியாவுடன் போட்டி போட்டுக் கொண்டு தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கு உதவிகளை வாரி வழங்கி வருகின்றது. கடந்த ஆண்டு மட்டும் உலக வங்கியை விட அதிகளவில் சீனா இலங்கைக்கு உதவிகளை வழங்கி உள்ளது.

இப்பொழுது போர் முடிந்த நிலையிலும் சீனா இலங்கைக்கு 3021 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது. இதுதவிர தனது நாட்டில் கொடும் குற்றம் புரிந்த 25ஆயிரத்துக்கும் மேற்பட்ட குற்றவாளிகளின் புகலிடமாக ஈழத்தை சீனா மாற்றிக்கொண்டு வருகின்றது.

இவ்வாறு இந்தியா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் தனக்கு அனுசரணையாக இருக்கும் தைரியத்தில் சர்வதேசத்தால் தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகள் மற்றும் இதர இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளைக் கொன்று குவித்த இலங்கை இராணுவம் இப்பொழுது விசாரணைக்கும் ஒத்துழைக்க மறுப்பதோடு எதிர்ப்பும் தெரிவிக்கின்றது.

மேலும் இந்த நாடுகளிடம் இருந்து இலங்கை அரசு இன்றுவரை உதவிகளையும் பெற்றுக்கொண்டு வருகின்றது.

ஆகவே முதற்கட்டமாக இன்று காலை 10 மணிக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நாம் தமிழர் கட்சி நடத்துகின்றது. இதில் தமிழர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு நம் எதிர்ப்பினை உலகுக்கு உணர்த்துவோம் என்று தெரிவிக்கின்றேன் என்று சீமான் கூறியுள்ளார். (6)

# இலங்கை கடற்படையினரின் தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

## வீரமணி அறிவிப்பு

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து இம்மாதம் 14ஆம்திகதி திராவிடர் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாள்ா கி.வீரமணி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது, கொல்லப்படுவது என்பது அன்றாட நிகழ்வாகி விட்டது. அவ்வாறு நடைபெற்ற தாக்குதலில் தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இத்தாக்குதல் சம்பவங்ளில், தமிழர்களின் கடும் கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் திராவிடர் கழகம் சார்பில் நாகபட்டினத்தில் 14ஆம்திகதி ஆர்ப்பாடம் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார். (6)

# விண்ணில் ரொக்கெட்டை செலுத்தி இந்திய மாணவர்கள் சாதனை

இந்திய மாணவர்கள் விண்ணில் ரொக்கெட் ஒன்றைச் செலுத்தி சாதனை படைத்துள்ளனர்.

வேலூர் வி.ஐ.டி.மாணவர்கள் தயாரித்த ரொக்கெட் திருவனந்தபுரம் தும்பா ரொக்கெட் ஏவுதளத்தில இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) உதவியுடன் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் 9 மாணவர்கள் ஆராய்ச்சி முறையில் சிறிய ரொக்கெட் ஒன்றை தயாரித்தனர்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஆராய்ச்சிக்காக உருவாக்கப்பட்ட ரோகிணி ரூ 200 (ஆர்.எச்) என்ற அந்த ரொக்கெட் திருவனந்தபுரம் அருகே உள்ள தும்பா விண்வெளி ஆராய்ச்சி மைய ஏவுதளத்தில் இருந்து கடந்த புதன்கிழமை மாலை 3.50 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

அது வெற்றிகரமாக இயங்கி வருவதாக திட்ட இயக்குநர் ரத்னாகரராவ் கூறினார். ரொக்கெட்டின் திசை மற்றும் வேகத்தை அளக்கின்ற உபகரணங்கள் மின்சாரக் கட்டுப்பாடு சுவிட்ச் போன்றவை மாணவர்கள் உருவாக்கியது. இஸ்ரோ உதவியுடன் மாணவர்கள் இந்த சாதனையை நிகழத்தியுள்ளனர்.

அடுத்த கட்டமாக முழுக்க முழுக்க இந்திய விண்வெளி தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர்களால் தயாரிக்கப்படும் நாட்டின் முதல் ஸ்டூடண்ட் ரொக்கெட் விரைவில் மண்ணில் ஏவப்பட உள்ளது.இதற்கான பணிகளில் மாணவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் தெரிவித்துள்ளது. (6-4)

# இந்தியாவின் வடமாநிலங்களில் தொடர்ந்து கனமழை ; 26பேர் பலி

(குருஷேத்ரா)

பஞ்சாப், ஹரியானா, டெல்லி உள்ளிட்ட வட மாநிலங்களில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக 26பேர் உயிரிழந்துள்ளனர்.

வட மாநிலங்ளில் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் அங்கு கனம்ழை பெய்து வருகிறது. இந்த மழைகாரணமாக குருஷேத்ரா, அம்பாலா, பாட்டியாலா உள்ளிட்ட நகரங்கள் வெள்ளக்காடாய் காட்சியளிக்கிறது. ஸட்லஜ், யமுனா மற்றும் காகர் நதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 50 இற்கும் மேற்பட்ட கரையோரக் கிராமங்கள் தண்ணீரில் தத்தளிக்கின்றன்.

வெள்ளத்தில் சிக்கி இதுவரை 26 பேர் பலியாகியுள்ளதாகவும் கரையோரப் பகுதிகளில் சுமார் 50 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனமழை காரணமாக அம்மாநிலத்திற்கு செல்லும் 12 க்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டு வேறு வழியில் திருப்பிவிடப்பட்டுள்ளன.

வீதிப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.மீட்புப் பணிகளில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.மேலும்,ராஜஸ்தான் மாநிலத்தின் கோடா பகுதியும் கனமழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, இந்த மழை மேலும் தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (6-4)


# பரஸ்பரம் உளவாளிகளை ஒப்படைக்கும் அமெரிக்கா-ரஷ்யா

அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட ரஷ்ய உளவாளிகள் 10 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் அவர்களை மீட்க ரஷ்யா கடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக தன்வசம் கைதிகளாக உள்ள அமெரிக்க உளவாளிகளை ஒப்படைக்க ரஷ்யா முன்வந்துள்ளது. அதற்குப் பதிலாக ரஷ்ய உளவாளிகளை ஒப்படைக்க அமெரிக்காவும் முன்வரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இரு நாடுகளின் வெளியுறவுத்துறையினர் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.ரஷ்ய உளவுத்துறையான கே.ஜி.பி. இடையே உயர் மட்டப் பேச்சுவார்த்தைகள் நடபெற்றுள்ளன. இந்த வாய்ப்பை நழுவவிட்டால் இரு நாடுகளிலும் சிக்கியுள்ள உளவாளிகளை இரு நாடுகளாலும் பரஸ்பரம் மீட்டுக் கொள்வது இயலாத காரியம் ஆகிவிடும் என்பதால் இதற்கு இரு நாட்டு அதிபர்களும் பச்சைக் கொடி காட்டிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அண்மையில் அமெரிக்காவில் கைதான ரஷ்ய பெண் உளவாளியான அன்னா சாப்மேன் உள்ளிட்ட 10 பேரையும் குற்றத்தை பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வைத்துவிட்டு அவர்களை ரஷ்யாவிடம் ஒப்படைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. பதிலுக்கு ரஷ்யா தன்னிடம் சிக்கிய பல காலமாக சிறையில் உள்ள அமெரிக்க மற்றும் ஐரோப்பிய உளவாளிகள் 10 பேரை விடுவிக்கும் என்று தெரிகிறது.

இந்த உளவாளிகள் ஒப்படைப்பு இன்றே ஆரம்பிக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த பரஸ்பரம் உளவாளிகள் ஒப்படைப்பை மிக ரகசியமாக அரங்கேற்ற இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன. முதல் கட்டமாக ரஷ்ய சிலையில் உள்ள அமெரிக்க உளவாளியான இகார் சுட்யாஜின் என்ற அணுவாயுத விஞ்ஞானி விடுவிக்கப்படவுள்ளார். (6)



சூரிய ஒளி மூலம் இரவு நேரத்திலும் பறக்கும் திறனுடைய அதிநவீன விமானம் சுவிட்சர்லாந்தில் வானில் பறந்து பரிசோதித்து பார்க்கப்பட்டது வெள்ளோட்டத்தை வெற்றிகரமாக முடித்து, தரையிறங்கிய விமானத்தை படத்தில் காணலாம்.




# 11 ஆண்டுகளாக பிணத்துடன் வாழ்ந்து வரும் மூதாட்டி

(நியூயோர்க்)

இறப்பு என்பதை பிரிவாக நினைப்பதில்லை. அப்படி நினைத்து உடலை அழிப்பது எனக்கு கடினம் என்று கூறுகிறார் அமெரிக்காவின் 91 வயது பெண். 11 ஆண்டுகளாக கணவரின் பிணத்துடனும் ஓராண்டாக அன்பு சகோதரியின் பிணத்துடனும் வசிக்கிறார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலம் வேயலுசிங் என்ற கிராமத்தை சேர்ந்த ஜீன் ஸ்டீவன்ஸுக்கு வயது 91. இவரது அன்புக் கணவர் பெயர் ஜேம்ஸ். இரட்டை பிறவியான ஜீனின் சகோதரி ஜுன் ஸ்டீவன்ஸ் , ஜேம்சுடன் வேயலுசிங் கிராமத்தில் வசித்தார். அங்கிருந்து 200 மைல் அப்பால் உள்ள வெஸ்ட் விமான நிலையத்தில் அவரது சகோதரி வசித்து வந்தார். இருவரும் தங்களைப் போலவே அதிர்ஷ்டவசமாக சகோதரர்களை திருமணம் செய்திருந்தனர்.

கணவர், சகோதரி மீது ஜீன் ஸ்டீவனுக்கு அப்படியொரு பாசம் இராணுவத்தில் பணியாற்றிய ஜேம்ஸ், 2ஆம் உலக போருக்கு பின் ஜெனரல் எல்க்ட்ரிக் நிறுவனத்தில் சேர்ந்தார். 1999 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி உடல் நலக் குறைவால் இறந்தார். அவரது உடலை உறவினர்கள் புதைத்து சென்றதும் இரகசியமாக அதை தோண்டியெடுத்து வீட்டுக்கு தூக்கி வந்தார் ஜீன். பிணம் கெடாமல் இருக்க செய்யும் இரசாயனங்களை தெளித்து 11 ஆண்டுகளாக பாதுகாத்து வருகிறார். கணவருக்கு நிகராக பாசம் வைத்திருந்த சகோதரி ஜுனும் கடந்த ஆண்டில் இறந்தார். இறுதி சடங்குக்கு போன ஜீன் வரும் போது வழக்கம் போல யாருக்கும் தெரியாமல் சகோதரியின் பிணத்தை வீட்டுக்கு கொண்டு வந்தார். அதற்கும் இரசாயன திரவங்களை பயன்படுத்தி பாதுகாத்து வருகிறார்.

கடந்த மாதம் இந்த விடயம் வெளியே தெரிய பொலிஸ் விசாரணை ஆரம்பமானது. விசாரணையில் ஜீன் ஸ்டீவன்ஸ் கூறுகையில், கணவரும் சகோதரியும் இறந்திருக்கலாம். அதைப்பற்றி எனக்கு கவலையில்லை. அவர்களின் இறப்பை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. உடலை அழித்து விட்டால் நினைவுகள் அழிந்து விடும். ஆனால் இப்போது பாருங்கள். கணவர் சகோதரியை தினமும் பார்க்கிறேன். அவர்களுடன் பேசுகிறேன். தொட்டு கொஞ்சி மகிழ்கிறேன் என்றார்.

இதுபற்றி பொலிஸ் அதிகாரி கூறுகையில், ஜீன் நடத்தை பற்றி விசாரிக்கிறோம். பிணங்களை அவரிடம் இருந்து பிரித்து வைத்துள்ளோம். ஆனால் அவர் மீது வழக்கு தொடரவில்லை என்றார் . (6)

# அந்தமான் நிக்கோபர் தீவுகளில் நிலநடுக்கம்; பீதியால் மக்கள் அலறியடித்து ஓட்டம்

(போர்ட்பிளேயர்)

இந்தோனேசியா மற்றும் இந்தியாவின் அந்தமான் நிக்கோபர் தீவுகளில் அடிக்கடி நில நடுக்கம் ஏற்படுகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு அந்தமானின் தென்கிழக்கு பகுதியில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமி குலுங்கியதால் மக்கள் அச்சம் அடைந்தனர்.

பீதியுடன் வீடுகளை விட்டு வெளியேறி சிறிது நேரம் வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். பின்னர் தங்கள் வீடுகளுக்கு சென்று தூங்கினர்.

இந்த நிலையில் நேற்றுக்காலை மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டது. வீடுகள் மற்றும் கட்டடங்கள் ஆட்டம் கண்டன. இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் தூக்க கலக்கத்தில் இருந்தபடியே வீடுகளை காலி செய்து விட்டு ஓட்டம் பிடித்தனர்.

இந்த நில நடுக்கத்தால் வீடுகளின் சுவர்களில் மிதமான கீறல் ஏற்பட்டது. உயிர்ச் சேதமோ, பொருட் சேதமோ ஏற்பட்டதாக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.3 ஆக பதிவானதாக புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது. (6-4)

## பயங்கரவாதிகளை ஒடுக்க அதிரடிப்படை தயார்

பாகிஸ்தானில் செயல்படும் 17 பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்க அதிரடிப்படை அமைக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் சொர்க்க பூமியாக உள்ளதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. இங்கு செயல்படும் ஜமாத் உத் தாவா உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகள் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றன.

அல்-குவைதா மற்றும் தலிபான் அமைப்புகளுக்கு சர்வதேச தடை உள்ளதால் இந்த அமைப்புகள் பல்வேறு பெயர்களில் பாகிஸ்தானில் இஸ்லாமிய அமைப்புக்கள் போர்வையில் செயல்பட்டு வருகின்றன. கடந்த வாரம் லாகூரில் வழிபாட்டுத் தலத்தின் மீது பயங்கரவாதிகள் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தியதில் 45 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (6)

# 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிம் காட் விற்பதற்குத் தடை

பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிம் கார்ட் விற்க பங்களாதேஷ் அரசு தடை விதித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசி மூலம் நடைபெறும் குற்றங்களை தடுக்கும் வகையில் அந்தநாட்டு அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக இச் சேவை நடத்தும் நிறுவனங்களுடன் பங்களாதேஷ் அமைச்சர்கள் குழு பேச்சு ஒன்றை நடத்தியது.

இது குறித்து அந்நாட்டு உள்துறை அமைச்சர் சஹாரா காதுன் நேற்று முன்தினம் கூறுகையில்,

சிறுவர்கள் கையடக்கத்தொலைபேசியைத் தவறாகப் பயன்படுத்துவதும் அதன் மூலம் குற்றங்கள் நடப்பதும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எனவே இது போன்ற விரும்பத்தகாத சம்பவங்களைத் தடுக்கும் வகை யில், 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிம் கார்ட்களை விற்கத் தடை விதிக்க முடிவு செய் யப்பட்டுள்ளது. தற்காலிகமாக 2 மாதங்களுக்கு மட்டும் முதலில் இந்தத் தடை விதிக்கப்படும். இக்காலகட்டத்தில் கையடக்கத் தொலைபேசி தொடர்பான குற்றங்கள் குறித்து கண்காணிக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது உபயோகத்தில் உள்ள சிம் கார்டுகள் எத்தனை சிறார்களின் பெயரில் உள்ளது என்பது கணக்கிடப் படவுள்ளது.

நாடு முழுவதும் சிறு குற்றங்கள் ஆரம்பமாகி பெரிய குற்றங்கள் அனைத்திலும் கையடக்கத் தொலைபேசியே பயன்படுத்தப்பட்டுவருகின்றன.


எனவே சிம் கார்டு விற்பனையில் கவனமாக இருக்குமாறு கையடக்கத் தொலைபேசி நிறுவன முகவர்களுக்கு அறிவுறுத்த ப்பட்டுள்ளது என்றார்அவர். (6-4)

# உலக மகா குண்டு மனிதர் மரணம்

இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் வசித்து வந்த டேவிட் ஹோரன் என்பவரது எடை 387 கிலோ ஆகும். உலகின் மிகவும் குண்டான மனிதராக இவர் விளங்கினார். உடல் எடையைக் குறைக்காவிட்டால் உயிருக்கே ஆபத்தாகி விடும் என தேசிய சுகாதார சேவை ஊழியர்கள் எச்சரித்தனர்.

இந்நிலையில் மாரடைப்பு ஏற்பட்டதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். 48 வயதான டேவிட் உடல் பருமன் காரணமாக நடக்க முடியாமல் இருந்தார். குளிப்பதற்குக் கூட மற்றவரின் உதவியை நாடி வந்தார்.

பால் மேசனுக்குப் பின் உலகின் குண்டு மனிதர் என்ற பெருமை டேவிட்டுக்குக் கிடைத்தது. பால் காஸ்ட்ரிக் பைபாஸ் சிகிச்சை மூலம் தனது எடையை 127 கிலோவாகக் குறைத்து விட்டார். அவரது இப்போதைய எடை 317 கிலோ ஆகும். (6)



ஐரோப்பிய செயற்கைக்கோள் ஒன்று ஒரு மிகப்பெரிய கரும்புள்ளியை படம்பிடித்துள்ளது. இது பூமியில் இருந்து 12 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச ஊடகங்களின் பார்வையில்; ஐ.நா.அலுவலகம் மீதான முற்றுகை

[illegible] அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் கொழும்பில் உள்ள ஐ.நா.அலுவலகத்தை கடந்த செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டுள்ள அரசு ஆதரவாளர்கள் நான்காவது நாளாகவும் தமது முற்றுகையைத் தொடர்ந்து வருகின்றனர்.

இலங்கை அரசின் இந்த வன்முறைகளை தொடர்ந்து சிலமணிநேரம் அலுவலகத்திற்குள் தடுத்துவைக்கப்பட்ட 125 ஐ.நா. அலுவலகப் பணியாளர்கள் பின்னர் அவசரமாக வெளியேறியபோதும், அவர்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீண்டும் அலுவலகத்திற்குள் செல்ல அனுமதிக்கவில்லை.

இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட போரின்போது, மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்த ஆலோசனைகளை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை அமைத்துள்ள மூவர் கொண்ட குழுவை கலைக்க வேண்டும் என அரசு தரப்பு ஆதரவாளர்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இலங்கை அரசின் இந்த வன்முறை குறித்து, அனைத்துலக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திகளின் முக்கிய பகுதிகள் வருமாறு,

பி.பி.சி-பிரித்தானியா தனது பார்வையிலிருந்து தெரிவிக்கையில்,

இலங்கை அமைச்சர் தலைமையிலான முற்றுகையைத் தொடர்ந்து ஐ.நா. பணியாளர்கள் வீட்டிலிருந்து பணியாற்றி வருகின்றனர். அலுவலகத்தல் சில முக்கிய அதிகாரிகளே உள்ளனர்.

இலங்கையில் ஐ.நா.வின் செயற்பாடுகள் பெருமளவில் முடக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்தியாளர் சார்ஸ் ஹாவிலலான்ட் தெரிவித்துள்ளர்.

தற்போது ஐ.நா. தனது அலுவலகத்தை அங்கு மூடியுள்ளதுடன், அதன் பிரதிநிதியையும் திரும்ப அழைத்துள்ளது. 1967 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஐ.நா. அலுவலகம் மூடப்படுவது குறிப்பிடத்தக்கது.

சி.என்.என்-அமெரிக்கா தனது பார்வையிலிருந்து தெரிவிக்கையில்,

இலங்கை அரச அமைச்சரும், அவரின் ஆதரவாளர்களும் மேற்கொண்ட முற்றுகையைத் தொடர்ந்து ஐ.நா. அலுவலலுகத்தில் இருந்து பணியாளர்கள் 3 மணி நேரமாக அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் மூடப்பட்டிருந்தது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அனைத்துலக நீதிமன்றத்தில் கொண்டு வர பான் கீ மூன் முனைவதாக விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். அமைச்சரின் நடவடிக்கையை அரசு ஆதரித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. முற்றுகை தொடர்வதற்கு அரசின் அறிக்கை வழி ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

ஆனால் இலங்கை அமைச்சரின் ஆர்ப்பாட்டத்தினை வன்மையாகக் கண்டித்துள்ள ஐ.நா. அலுவலகம், தமது பணியாளர்களின் அத்தியாவசிய பணிகள் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. அமைத்துள்ள ஆலோசனைக் குழு கலைக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள், ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் அமெரிக்காவின் ஏவலாளி என தனிப்பட்ட தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஏ.எஃப்பி -பிரான்ஸ் தனது பார்வையிலிருந்து தெரிவிக்கையில்,

இலங்கை அமைச்சர் தலைமையில் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் முற்றுகையிடப்பட்ட போதும், அமெரிக்கா ஐ.நாவுக்கு தனது ஆதரவுகளை தெரிவித்துள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான விதிகளின் மீறல்கள் ஆகியன விசாரணை செய்யப்பட வேண்டும் என அமெரிக்க வெளியுறவுச் செயலக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அமைச்சரின் நடவடிக்கையினால், ஐ.நா. அலுவலகப் பணியாளர்கள் ஏழு மணிநேரம் தடுத்துவைக்கப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இணையத்தள ஊடகமான தற்ஸ் தமிழ் தனது பார்வையிலிருந்து தெரிணுவிக்கையில்,

இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்த திட்டமிட்டபடி இந்த மாத இறுதியில் விசாரணை தொடங்கும். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கையில் போராட்டங்கள் நடப்பது குறித்து நாங்கள் கவலைப்படவில்லை என்று ஐ.நா.அமைத்துள்ள நிபுணர் குழுவின் தலைவரான மர்சுகி தருஸ்மான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், நிபுணர் குழு தனது பணிகளை ஆரம்பிப்பதற்காக இம்மாதம் மூன்றாவது வாரத்தில் கூடவிருந்தது.திகதி இன்னும் அறிவிக்க வில்லை. இந்தக்குழுவை எதிர்த்து நடந்து வரும் போராட்டங்கள் குறித்து நாங்கள் கருத்தில் கொள்ளவில்லை.

இந்தக்குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள் முட்டாள்கள் என்று இலங்கை அமைச்சர் வீரவன்ச கூறியுள்ளது குறித்து கருத்து தெரிவிக்க விரும்ப வில்லை என்று கூறினார் தருஸ்மான்.

ஐ.நாவின் ஊடக அமைப்பான இன்னசிற்றி பிரஸ் தனது பார்வையிலிருந்து தெரிவிக்கையில்,

ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்டு பணியாளர்களை பணயக் கைதிகளாக பிடிக்கப்போவதாக ஆறுநாட்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுத்தித்திருந்த அமைச்சர் தற்போது முற்றுகையை மேற்கொண்டுள்ளார்.

விமலின் எச்சரிக்கையை ஐ.நா. உயர் அதிகாரி அது ஒரு காந்தீய எச்சரிக்கை எனத் தெிவித்திருந்தார். ஆனால் அவர் காடையர்கள் சகிதம் ஐ.நா.அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ளார்.

இலங்கை அரசு தம்மிடம் மன்னிப்புக் கேட்கலாம் என ஐ.நா. தெரிவித்திருந்த நிலையில் இலங்கை அரசானது வன்முறைகளை மேற்கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## வருடாந்த மஹோற்சவம்

(கரவெட்டி)

அல்வாய் ஸ்ரீ வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளைக் காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (6-24)

## குப்பைகள் அகற்றப்படாமையினால் — மக்கள் அசௌகரியம் —

(கொழும்புத்துறை)

கோண்டாவில் காரைக்கால் மயான வீதியிலுள்ள குப்பைகள் மற்றும் கோழிக் கழிவுகளால் துர்நாற்றம் வீசிய வண்ணம் உள்ளது.

நல்லூர் பிரதேச சபையினரால், டெங்கு ஒழிப்புக்காக ஒலிபெருக்கி மூலம் குப்பைகளை அகற்றும் விதம் பற்றி அறிவிக்கப்பட்டது. இவ் அறிவித்தலுக்கமைய மக்கள் தங்கள் குப்பைகளை வீதிகளில் உரைப்பையினுள் இட்டு வைத்துள்ளனர். அவற்றை அவ்விடத்திலிருந்து எடுத்துச் செல்லப்படாமையால், துர்நாற்றம் வீசுகிறது.

இதேவேளை வீடுகளுக்கு சென்று இரும்பு வகைகளை சில்லறையாகக் கொள்வனவு செய்பவர்களால் இக் குப்பைகள் மீண்டும் கிண்டப்பட்டு சிதறவிடப்பட்டுள்ளது.


ஆதலால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (6-51)

## வடமராட்சிப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள்

வடமராட்சிப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருகிறது.

பருத்தித்துறை புலோலி மேற்கு திருநாவலூர் கிராமத்தில் கடந்த 4 ஆம் திகதி பகலில் வீதியால் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத திருடர்கள் இருவர், பெண்ணின் கழுத்தில் இருந்த 11 பவுண் நிறையுடைய தாலிக் கொடியை அறுத்துள்ளனர்.

அப்பெண் கூக்குரல் இடவே அயலில் உள்ளவர்கள் அவ்விடத்திற்கு விரைந்த போது திருடர்கள் கைவரிசையைக் காட்டி விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது. (6-10)



இலங்கை கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட நாடளாவிய அறிவிப்பாளர் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கு.தினேஸிற்கு முன்னாள் சபாநாயகரும் தற்போதைய சப்ரகமுவ மாகாண ஆளுநருமான லொக்கு பண்டார விருது வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் இளைஞருக்கான நாளை அமைப்பின் பணிப்பாளர் ரவிந்திரதாஸ பண்டார நிற்பதையும் படத்தில் காணலாம்.


அறிவித்தல்

## வலி.கிழக்கு பிரதேசசபை உப அலுவலகம் உரும்பிராய்

**ஆதன பெயர் மாற்றம் : வட்டாரம் 04 சிவகுலவீதி ஆதன இல.16/10,16/10A**

ஆதன இலக்கம் 16/10,16/10A சிவகுலவீதி 01ஆம் வட்டாரத்தில் வைரவப்பிள்ளை ஆறுமுகம் எனும் பெயரிலுள்ள ஆதனத்திற்கு ,இராசரத்தினம் இராசதுரை என்பவர் குறித்த ஆதனம் தமக்கு உரிமையானது ,என உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆதனவரிப்பதிவேட்டில் தனது பெயரை மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார். இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் எவரேனும் இருப்பின் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து இராசரத்தினம் இராசதுரை என்னும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

(த.நடராசா)
செயலாளர்,
வலிகிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

(C-618)

சாபங்கள் – கோழிக் குஞ்சுகளைப் போன்றது. அவை நம் வீட்டுக்கே திரும்ப வந்துவிடும்.
– ஹாலந்து

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வீரவன்சவின் உண்ணாவிரதம் அப்பட்டமான சாட்சியம்

"அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட்பண்பில்லாதவர்" என்பது வள்ளுவரின் முடிபு.

பிற ஆயுதங்களை கூர்மையாக்கக் கூடிய அரத்தின் கூர்மை எத்துணை சிறப்பானதோ அது போன்றவர்கள் சீரிய அறிவுடையவர்கள். அவர்களிடம் சீரிய அறிவு இருந்தாலும் பண்பு இல்லையேல் அவர்கள் மரத்திற்கு ஒப்பானவர்கள் என்பது இதன் பொருளாகும்.

அதீதமான அறிவுடையவர்களாக இருந்தாலும் அவர்களிடம் பண்பில்லையாயின் அவர்கள் மரத்திற்கு இணையானவர்களெனில்,

அறிவும் இல்லாமல், பண்பாடும் தெரியாமல் இருப்பவர்களை எதற்கு ஒப்பிடலாம் என்று கேட்பதற்கு வள்ளுவர் உயிரோடில்லை.

அத்தகையதொரு கேள்விக்கு வள்ளுவர் உயிரோடு இருந்தாலும் பதிலளிக்க முடியாதென்பதே எமது தாழ்மையான கருத்து.

இந்தக் கருத்தை நாம் முன்வைப்பதற்கு விமல் வீரவன்சவே காரணமாக இருக்கின்றார். இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு ஐ.நா. சபை முயற்சிகளை மேற்கொண்டிருக்கும்போது, கொழும்பிலுள்ள ஐ.நா.தூதரகத்திற்கு முன்பாக விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் இலங்கையின் வளர்ச்சி குன்றிய பண்பாட்டை உலக நாடுகளுக்கு வெளிக்காட்டியது.

இதற்குமேலாக இப்போது விமல் வீரவன்ச சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளார்.

வன்னி யுத்தத்தின்போது இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சரத் பொன்சேகா, ஐ.நா.சபை மேற்கொள்ளும் விசாரணையை அரசு எதிர்கொள்ளவேண்டும் எனக் கூறுகிறார். போரின்போது 'குற்றம்' இடம்பெறவில்லை எனில் அச்சமின்றி, ஐ.நா.விசாரணைக் குழுவை எதிர்கொள்ள முடியும் என்பது அவரின் வாதம்.

யுத்தத்தின் போது இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சரத் பொன்சேகா இவ்விதம் கூற, விமல் வீரவன்ச சாகும்வரை உண்ணாவிரதமிருப்பது எதற்காக?

வன்னியுத்த வெற்றியில் தனக்கும் ஒரு பங்கை எடுத்துக் கொள்வதற்காகவா? எல்லாமே அறியாமையின் வெளிப்பாடு.

எல்லா நேரத்திலும் ஏமாற்றுவித்தை அரங்கேற மாட்டாது. சிலவேளைகளில் ஏமாற்று நாடகங்கள் செய்த குற்றங்களுக்கான அப்பட்டமான சாட்சிகளாகவும் அமைந்துவிடுவது வழக்கம்.

# தமிழ் மக்களிடம் முழந்தாளிட்டு வீரவன்ச மன்னிப்புக் கோரவேண்டும்

## விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்ச தமிழ் மக்களின் முன் முழந்தாளிட்டு வணங்கி மன்னிப்புக் கோரவேண்டும். அம்மக்களுடன் இணைந்து அவர்கள் இலங்கையில் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையை உறுதிசெய்யுமாறு கோருவாராயின் அவரது உண்ணாவிரதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளலாம் என புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸவின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச அரங்கேற்றும் நாடகத்திற்கு உள்பொருள் தான் எமக்கு புரியவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு குறித்து விமல் வீரவன்ச ஏன் பயப்படுகிறார் என்பது, எமக்கு அவர்மீதான சந்தேகத்தை வலுப் பெறச் செய்கின்றது.

அரசாங்கத்துடன் இணைந்து இவர் முன்னெடுக்கும் திட்டங்கள் குறித்து மக்கள் கொதிப்படைந்துள்ளனர். இதனால் மக்களது கவனத்தைத் திசைதிருப்பும் முகமாகவே இவ்வாறானதொரு நாடகத்தை அவர் அரங்கேற்றுகிறார்.

இது தமிழ் மக்களைக் காப்பாற்றும் எண்ணமல்ல. தன் மீது பழுந்துள்ள சேற்றைக் கழுவும் செயற்பாடாகவே நாம் காண்கிறோம் எனத் தெரிவித்தார். (ச–5)

# அச்சுறுத்தல், போராட்டங்கள் மூலம் இராஜதந்திரத்தை எட்ட முடியாது

## தயான் ஜயதிலக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அச்சுறுத்தல்கள் மற்றும் போராட்டங்கள் மூலம் இராஜதந்திரத்தை எட்ட முடியாதென ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் கொழும்புக்கிளைக்கு எதிரில் விமல் வீரவன்சவினால் நடத்தப்பட்டு வரும் போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விமல் வீரவன்சவின் உண்ணாவிரதப் போராட்டம் வீண் விரயமான முயற்சியாகவே அமையும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

விமல் வீரவன்ச பொறுப்புவாய்ந்த இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர். அவரது நடவடிக்கைகள் இலங்கையை பாதகமான முறையில் பாதிக்கும். பணியாளர்களை வெளியேறவிடாது முற்றுகையிடல் போன்ற நடவடிக் கைகள் உலக அரங்கில் இலங்கைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமையும்.

இவ்வாறான நடவடிக்கைகளால் எந்தவொரு நாட்டினதும் அனுதாபம் கிட்டாது. சர்வதேச அரங்கில் தனிமைப் படுத்தப்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. முக்கியமான சர்வதேச நிறுவனமொன்றை அச்சுறுத்துவதன் மூலம் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது.

நிபுணர்கள் குழு நியமனம் தேவையற்றது. நிபுணர்கள் குழுதொடர்பில் இலங்கையில் அதீத அல்லது பலவீனமான கருதுகோள்கள் நிலவுகின்றன. ஜனநாயக ரீதியான நாடு என்ற அடிப்படையில் இலங்கை தொடர்பாக நிபுணர்கள் குழு அமைக்கப்பட வேண்டிய அவசியமில்லை எனவும் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் பான் கீ மூன் நிபுணர்கள் குழுவினை நியமிப்பதில் தவறில்லை எனவும் அது இலங்கையின் இறைமையை பாதிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அவசரகாலச்சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப் படுவதற்கான எவ்வித அவசியமும் தற்போது கிடையாது என சுட்டிக்காட்டிய அவர்,

யுத்ததிற்கும் சமாதானத்திற்குமிடையில் வேறுபாடு இருக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளளார். (ச–5)

# கிளி. காணிப் பதிவாளர் அலுவலகத்தில் காணிப்பதிவு புத்தக பிரதி பெற முடியாது

## பதிவாளர் றெஜி அலோசியஸ் தகவல்

கிளிநொச்சி மாவட்ட செயலக காணிப் பதிவாளர் அலுவலகத்தில் காணிப்பதிவுப் புத்தகப் பிரதி பெற முடியாது என மாவட்ட காணிப் பதிவாளர் அ.றெஜி அலோசியஸ் தெரி வித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலக காணிப் பதிவு அலுவலக ஆவணங்களுடன் போர்ச் சூழலின்போது வலைஞர் மடத்தில் விடப்பட்ட லொறி தொடர்பான தகவல் எதுவும் அறிவிக்கப் படாமையினால் காணிப்பதிவுப் புத்தகப் பிரதிக்கு விண்ணப் பிப்பவர்களுக்கு உரிய பதில் வழங்க முடியாதுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட காணிப்பதிவாளர் அ.றெஜி அலோசியஸ் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்ட காணிப்பதிவாளர் அலுவலகத்தில் காணிப்பதிவுப் புத்தகப் பிரதியைப் பெற்றுப் கொள்ள முடியாது. போர் சூழலின்போது கிளிநொச்சி மாவட்ட செயலக காணிப் பதிவாளர் அலுவலக ஆவணங்கள் பாதுகாப்பாக மாவட்டச் செயலக லொறியில் எடுத்துச் செல்லப்பட்டு வலைஞர் மடத்தில் விடப்பட்டது.

எனினும் அந்த லொறி தொடர்பான எதுவித தகவலும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதனால் காணிப்பதிவுப் புத்தகப் பிரதிக்கு விண்ணப்பிப்பவர்கள் அதனைப் பெறமுடியாது எனவும் அதற்கான சரியான பதில் வழங்க முடியாதுள்ளது. இந்நிலையில் காணி உரிமையாளர் சத்தியக் கடதாசியை பூர்த்திசெய்து மாவட்டசெயலக காணிப் பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து மீண்டும் காணிப்பதிவு புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும் என்றார். (ச–5)

# புவியியல் பாட கருத்தரங்கு

(கொழும்பு)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும் யாழ் கல்வி வலய அலுவலகமும் இணைந்த நடத்தும் க.பொ.த(உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான புவியியல் பாட வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 12 ஆம்13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் தீவகம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் யாழ்.கோட்ட மாணவர்களுக்கு யாழ் மத்திய கல்லூரியிலும் வலிகாமம், நல்லூர், கோப்பாய் கோட்ட மாணவர்களுக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு பிரபல ஆசிரியர்களால் நடத்தப்படவுள்ளதால் குறித்த மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெறுமாறு தொண்டமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது. (ச–4)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### மதம்

மனிதனில் ஏற்கனவே இருக்கின்ற தெய்வீகத்தை வெளிப்படுத்துவது மதம்.

மதம் என்பது ஆன்மா சம்பந்தப்பட்டது. சமூக விடயங்களில் தலையிட அதற்கு எந்த உரிமையும் இல்லை என்பதைக் குறிப்பாக நீங்கள் நினைவில் வைக்கவேண்டும் ஏற்கனவே விளைந்துள்ள தீமைகள் அனைத்தும் அப்படித் தலையிட்டதன் காரணமாகவே என்பதையும் மறக்கக் கூடாது

ஒரு மதம் பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால் அது உத்வேகம் மிகத்தாக இருக்கவேண்டும். அதேவேளையில் அதில் உட்பிரிவுகள் பெருகிக்கொண்டே போகின்ற அபாயத்தையும் தடுக்கவேண்டும். பிரிவினைவாதம் அற்ற பிரிவாக இருப்பதன் மூலம் இதை நாம் தடுக்க முடியும்; ஏனெனில் இதில் ஒரு பிரிவிற்கான அனுகூலங்கள் அனைத்தும் இருக்கும், உலகம் தழுவிய ஒரு மதத்திற்கான பரந்த தன்மையும் இருக்கும்.

# இலங்கைக்குள் ஊடுருவும் சீனா; இந்திய தேசத்துக்குப் பேராபத்து

## சீமானின் சீற்றம் பாரதத்துக்கு புரியுமா



முள்ளிவாய்க்காலை முன்வைத்து உலகமே இன்று இரண்டாகப் பிளவுபட்டு நிற்கிறது.

இலங்கையில் நடந்திருக்கும் போர்க் குற்றங்களை விசாரிக்க ஐக்கிய நாடுகள் ஒரு குழுவை அமைக்க... அதை அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் ஆதரிக்க... ரஷ்யாவும் சீனாவும் எதிர்த்து நிற்க... இந்தியா இன்னமும் கருத்துச் சொல்லாமல் மௌனமாக இருக்கிறது. போர் முடிவுக்கு வந்ததாகச் சொல்லப்பட்ட நிலையிலும், இன்னமும் கொடூரங்களும் கொடுமைகளும் தொடர்வதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன. இதுபற்றி, நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமானிடம் பேசினோம்.

**இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களை விசாரிக்க, ஐ.நா. அவை மூவர் குழுவை நியமித்து இருப்பது வரவேற்கத்தக்க செய்திதானே?**

எங்கள் சமூகத்தை நான்கு புறமும் சூழ்ந்து சுற்றி வளைத்துக் கொலை செய்த காலத்தில் அமைதியாக வேடிக்கை பார்த்ததும் இந்த அவைதான் என்ற வருத்தம் இருந்தாலும், இது ஆறுதலான ஆரம்பம்.

இந்த விசாரணையையும் எப்படியாவது தடுத்து முடக்கிவிட, இலங்கையும் அதனை ஆதரிக்கும் நாடுகளும் நினைக்கலாம். அப்பாவிகளை அங்குலம் அங்குலமாக நகர்த்திக் கொண்டு போய் கடலம்மாவின் காலடியில் வைத்து சுட்டுப் பொசுக்கிய சண்டாளர்களைப் பழிவாங்கும் தொடக்கப் புள்ளியாக இது அமையும்!

**இந்தியா இதில் எந்தக் கருத்தும் சொல்லவில்லையே?**

இந்தியா விரும்பிய போரை நாங்கள் நடத்தி முடித்தோம் என்று மகிந்தா ராஜபக்ஷ பகிரங்கமாக அறிவித்தார். இந்தப் போரை நடத்துவதற்கு எங்கள் நாட்டில் இருந்து மூன்று பேர்கொண்ட குழுவை அமைத்தோம். இந்தியா சார்பில், எம்.கே.நாராயணன், சிவசங்கர் மேனன், ஶ்ரீவிஜயசிங் ஆகிய மூவரை நியமித்தார்கள். நாங்கள் நித்தமும் தொடர்புகொண்டு பேசித்தான் இந்த யுத்தத்தை நடத்தினோம் என்று கோத்தபாய ராஜபக்ஷ சொன்னார்.

இந்த யுத்தத்துக்காக இந்திய அரசு என்னென்ன உதவிகளைச் செய்தது என்று இலங்கை நாடாளுமன்றத்தில், அந்த நாட்டு அமைச்சர் பகிரங்கமரக அறிவித்தார். இந்தியாவுக்கு நன்றி என்ற பதாகைகளை ஏந்தி, கொழும்பு வீதிகளில் சிங்களவர்கள் ஊர்வலம் போனார்கள். இதற்கெல்லாம் இந்தியா இதுவ்ரை கருத்துச் சொல்லவில்லையே.

அதற்கு என்ன அர்த்தம்? உண்மையைத்தானேசொல் கிறார்கள் என்று மௌனமாகிவிட்டார்கள் இப் படிப்பட்ட இந்தியா இலங்கைக்கு எதிராக எப்படிப்பேச முடியும்? ஏழு கோடித் தமிழர்களை உள்ளடக்கிய எம் தேசம் இப்படிப்பட்ட துரோகத்தைச் செய்யக் கூடாது என்று தானே திரும்பத் திரும்ப நாம் வீதிகளில் நின்று கத்தினோம். தமிழ், தமிழன் என்று பேசினால், அது இந்திய தேசியத்துக்கு எதிரானது என்று மத்திய ஆட்சியாளர்கள் நினைத்தார்கள். இந்தியாவின் விடுதலைக்காக எண்ணற்ற தியாகிகளைக் கொடுத்தவன் தமிழன். ஆயுதம் தூக்கிய கட்டபொம்மன் தொடங்கி, அகிம்சை காலத்து வ.உ.சி வரை எத்தனையோ தியாகிகள் இங்கு உண்டு.

காந்தி, நேரு, நேதாஜி, திலகர், பகத்சிங், அம்பேத்கர், இந்திரா, ராஜீவ்... என்று வடபுலத்துத் தலைவர்கள் பெயரை அதிகம் வைத்துக் கொண்டவன் தமிழன்.

வட இந்தியாவில் எந்த காங்கிரஸ்காரனாவது தனது பிள்ளைக்கு காமராஜ், கக்கன் என்று பெயர் வைத்திருப்பானா? வ.உ.சி பெயரோ, பெரியார் பெயரோ உண்டா? காவிரியில் தண்ணீர் தர்ாவிட்டாலும், முல்லைப் பெரியாறில் முரண்டு பிடித்தாலும், என் மக்களுக்குத் துரோகம் செய்தாலும், சட்டத்துக்குக் கட்டுப்பட்டு இந்திய தேசிய எல்லைக்குள் இருக்கிற எங்களைத் துரோகிகளாகப் பார்த்தால், இழப்பு யாருக்கு என்பதைக் காலம்தான் சொல்லும்!

**பயங்கரவாதிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போரில் இந்தியா உதவி செய்தது என்று பதில் தரப்படுகிறதே?**

அதைத்துணிந்து சொல்வதற்கான யோக்கியதை இன்றைய ஆட்சியாளர்களுக்கு உண்டா? இதுவரை இலங்கைக் கடற்படையால் 500 தமிழ் மீன



வர்கள் கொல்லப்பட்டார்களே... அவனெல்லாம் பயங்கரவாதியா? அதை, மன்மோகன் சிங்கும் சோனியாவும் கண்டித்தார்களா? தமிழக மீனவர்களைக் கொல்கிறார்கள் என்றால், யாரும் பயப்படத் தேவை இல்லை என்கிறது டெல்லி. சீனாக்காரன், அருணாசலப் பிரதேசத்துக்குள் வருகிறான் என்றால் யாரும் பயப்பட வேண்டாம் என்கிறது டெல்லி. நாங்கள் எது எதற்குப் பயப்படலாம், எதற்கெல்லாம் பயப்படக் கூடாது என்று டெல்லி பட்டியல் போட்டுத் தந்தால் பரவாயில்லை.

மனவனை அடிக்கும்போது ப்ளடி இண்டியன்ஸ்... ப்ளடி தமிழன்ஸ் என்று ஒரு சிங்களவன் கத்துகிறான். நோ... நோ... பிரபாகரன் ரிலேஷன்ஸ் என்று இன்னொருவன் எடுத்துக் கொடுக்கிறான். இந்தியன் என்றாலே பிரபாகரனின் உறவுக்காரன் என்று சிங்களவன் நினைக்கிறான். சீனாவும் பாகிஸ்தானும் உங்களுக்கு உதவி செய்கிறோம் என்று வந்தபோது மறுத்தவர் பிரபாகரன். இந்தியாவைத் தன்னுடைய தந்தையர் தேசமாக அவர் நினைத்தார். இதை இந்தியா உணர மறுத்தது.

அதற்கான பலனை விரைவில் அனுபவிக்கப் போகிறது. சீனாவின் காலனி ஆதிக்க நாடாக இலங்கை மாற்றப்பட்டு, பாரதத் தாயின் பாதத்தில் பள்ளம் விழப்போகிறது!

**இன்றைய நிலையில் ஈழம் எப்படி இருக்கிறது?**

ஏழைகள் அனைவரையும் கொன்றுவிட்டு, ஏழ்மையை ஒழித்துவிட்டதாக சொல்வதைப்போல மக்கள் அனைவரையும் கொலை செய்துவிட்டு, நாடு அமைதியாகி விட்டதாகச் சொல்கிறார்கள்.

மரண வாசனைக்கு மத்தியில், சிங்களத் தலைவர்கள் சும்மா இருக்கவில்லை. ஐந்து விதமான கொடூரங்களை இரக்கம் இல்லாமல் செய்ய ஆரம்பித்திருப்பதாக எனக்குத் தகவல்கள் வருகின்றன.

அம்பாந்தோட்டை என்ற இடத்தில் கப்பல் கட்டும் தளத்தை சீன அரசு அமைத்து வருகிறது.

அதில் வேலை பார்க்க சீன தேசத்தில் இருந்து 25 ஆயிரம் பேர் வந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே கைதிகளாம். ஒழுக்கமும் கட்டுப்பாடும் பண்பற்ற வேண்டிய இராணுவ வீரர்களே சீரழிவின் உச்சத்துக்குச் செல்லும் ஒரு தேசத்தில் வந்து இறங்கிய சீனக் கைதிகள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதைச் சொல்ல வேண்டியது இல்லை.

வந்திருப்பதில் 5,000 பேர் சீன உளவாளிகள் என்றும், 10 ஆயிரம் பேர் சீனத் தீவிரவாதிகள் என்றும் விவரம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

தமிழ் ஆண் மக்கள் அனைவரையும் கொன்றுவிட்டு, சீனக் கலப்பினத்தை உருவாக்கும் திட்டத்துடன்தான் இவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளாரகள். இது முதலாவது ஆபத்து.

முள்வேலி முகாமில், தடுப்புக் காவல் முகாம்களில் இருக்கும் எம் தமிழ்ச் சகோதரிகளில் பலரும் இப்போது கர்ப்பமாக இருக்கிறார்கள். அதாவது, சிங்கள இராணுவவீரர்களின் பாலியல் இச்சைக்குப் பயன்படுத்தப்பட்டு உள்ளார்கள். அவர்களது கருககளைக் கலைக்கவிடாமல் கொடுமைப்படுத்துகிறார்கள். சிங்களக் கலப்பினம் பச்சையாக உருவாக்கப்பட்டுவிட்டது. இது இரண்டாவது ஆபத்து.

தமிழர் வாழ்ந்த பகுதிகள் அனைத்திலும் இருந்த தமிழ் அடையாளங்கள் அழிக்கப்பட்டு, சிங்கள மற்றும் பௌத்த அடையாளங்கள் நிறுவப்படுகின்றன. இந்துக் கோயில்கள் இருந்த இடங்களில் புத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. சிங்களக் கடைகளில் பொருட்கள் வாங்கி, புத்த சாமிகளை வணங்கித்தான் இனி தமிழன் வாழ முடியும். இது மூன்றாவது ஆபத்து.

முக்கியமான மீன்பிடி இடங்கள் அனைத்தும் சீனாவுக்குத் தாரை வார்க்கப்பட்டதால், அவர்கள் ராட்சத இயந்திரங்கள் மூலமாக மீன்களை உறிஞ்சினால், இனி இந்திய மீனவர்கள் கடலில் பிடிக்க மீனே இருக்காது.

அதாவது, நம்முடைய நாட்டின் மீன்பிடி வர்த்தகம் முழுமையாக அழியப்போகிறது. இங்கு பல்லாயிரக் கணக்கான மீனவர் வாழ்க்கையில் மண் விழப்போகிறது. இது நான்காவது ஆபத்து.

பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் வடக்கில் இருப்பதால்தான், தென்னகத்தில் மிக முக்கியமான நிறுவனங்களை மத்திய அரசு அமைத்தது. ஆனால், இன்று நம்முடைய எதிரிகள் ஈழத்தில் முழுமையாகக் கால் ஊன்றுவதால் அதிக ஆபத்து தமிழ்நாட்டுகத்தான். இது ஐந்தாவது ஆபத்து, இந்திய தேசத்துக்கே பேராபத்து!

**கடைசிக் கேள்வி என்னவாக இருகும் என்று உங்களுக்கே தெரியுமே?**

ம்... தலைவர் இருக்கிறாரா என்பது தானே? பிரபாகரனின் மரணச் சான்றிதழை இலங்கை அரசாங்கம் கொடுத்த பறகும், ராஜீவ் வழக்கை இந்தியா ஏன முடிக்கவில்லை? புலிகள் அமைப்பே இல்லாதபோது, இந்தியா ஏன் இன்னமும் தடையை நீட்டித்துக்கொண்டு இருக்கிறது? முள்ளி வாய்க்கால் முடிநதுபோன பிறகும் முன்னரிலும் வேகமாக அடக்குமுறைகளை இலங்கை தொடர்வதற்கு என்ன காரணம்? காட்டுப் பகுதியே இருக்கக் கூடாது என்று கங்கணம் கட்டி அழிப்பதன் பின்னணி என்ன? மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நான்பேசு வதற்கு அனுமதித்தகனடா, இன்று தடுப்பதற்கு என்ன அர்ததம்?

நமக்கெல்லாம் தெரியாத விடை அவர்களுக்குத் தெரியுமப்பா. தலைவன் இருக்கிறான் என்பதை நான் நிரூபிக்கத் தேவை இல்லை. உலக நாடுகளே நிரூபித்துக்கொண்டு இருக்கின்றன!

ஆனந்த விகடன்

# வடக்கு மாகாண பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்!

**11 வயதுப்பிரிவு 75 மீற்றர் ஓட்டம**

ஆண்கள்-ஏ.எஸ்.ஜே.ஜொனி ஜோய் (மன்னார் சென்.சேவியர்), சி.சாகித்தியன் (முருங்கன் மகாவித்தியாலயம்), பி.கேசவன் (குடோமியன் றோ.க.த.பா).

பெண்கள்-அ.அபிநயா (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி), ஆர்.எஸ்.துசார (இளவாலை கன்னியர் மடம்), எம்.பாத்திமா றிஸ்னோ (மன்னார் பாத்திமா றோ.க.த.பா).

**உயரம் பாய்தல்**

பெண்கள்-பி.தினேசா (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி), யோ.சோபிகா (மிருசுவில் றோ.க.த.பா), எஸ்.கீர்த்தனா (அரிப்பு றோ.க.த.பா).

**13 வயதுப்பிரிவு நீளம**

பெண்கள்-எஸ்.மேரி நிலக்ஸனா (இளவாலை கன்னியர் மடம்), எஸ்.பிரியதர்சினி (மன்னார் கௌரியம்பாள் றோ.க.த.பா), சி.ஆரணி (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி).

**உயரம் பாய்தல**

ஆண்-எஸ்.கேதீஸ்வரன் (வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்), சி.டிலக்ஸன் (மகாஜனக் கல்லூரி), பி.கிமிட்சோ (மன்னார் சென்.சேவியர்).

**100 மீற்றர் ஓட்டம்**

ஆண்கள்-எம்.அபியத்சீம் (மன்னார் சென்.சேவியர் கல்லூரி), ஆர்.சஜீந்திரன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.வனஜன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்).

பெண்கள்-எஸ்.ஆரணி (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி), எஸ்.மேரி நிலக்ஸனா (இளவாலை கன்னியர் மடம்), எஸ்.பிரியதர்சினி (கௌரியம்பாள் றோ.க.த.பா).

**15 வயதுப்பிரிவு தட்டெறிதல**

பெண்கள்-எஸ்.சாசனா (மகாஜனக் கல்லூரி), கே.தீபாஜினி (புன்னாலைக் கட்டுவன் றோ.க.த.பா).

**ஈட்டி எறிதல்**

பெண்கள்-ரி.சங்கீஸ்தா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ஜி.ஏ.சுமந்தி மதுசனி (வவுனியா தர்மாகல றோ.க.த.பா), எச்.நோபேசா (சுண்டுக்குளி மகளிர்கல்லூரி).

ஆண்கள்-இ.வோய்டிலன்சோய் (மன்னார் சென்.அன்ரனீஸ் மத்திய மகா வித்தி), சி.டினேசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இ.இருளண்பன் (மன்னார் முருங்கன் மகா வித்தி).

**100 மீற்றர் ஓட்டம்**

பெண்கள்-ஜோய் காருண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜே.சிந்துஜா (கற்கிடந்த குளம் றோ.க.த.பா), ஆர்.தனுசா (புனித வளனார் றோ.க.த.பா).

ஆண்கள்-ஆர்.சத்தியோகு (மன்னார் சென்.சேவியர் கல்லூரி), இ.சோய்டிலக்ஸியன் (மன்னார் சென்.அன்னீஸ் மத்திய மகாவித்தி), எஸ்.நிருத்திகன் (வவுனியா சிக்கட்புலவு றோ.க.த.பா)

**200 மீற்றர்**

பெண்கள்-எம்.ஜோய் காருண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பி.ஜெயந்தினி (வவுனியா கோணேஸ்வரா மகா வித்தி), வி.ஜெனித்தா (வவுனியா சைவப்பிரகாச மகாவித்தி).

ஆண்கள்-ஆர்.சத்தியோகு (மன்னார் சென்.சேவியர் கல்லூரி), கே.பவிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எம்.தனுசன் (நெலுக்குளம் மகா வித்தி).

**400 மீற்றர் ஓட்டம்**

பெண்கள்-அ.எனெட் (மாதகல் சென்.ஜோசப் வித்தி), பி.ஜெயந்தினி (வவுனியா கணேஸ்வரா மகாவித்தி), வி.ஜெனித்தா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி).

ஆண்கள்-ஜி.ரதீஸ்வரன் (மன்னார் உயிலன் குளம் றோ.க.த.பா), எம்.மதூசன் (புலோலி எம்.எம்.ரி.எம்.வி), ரி.அகிந்தன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

**தட்டெறிதல்**

பெண்கள்-எஸ்.சாசனா (மகாஜனக் கல்லூரி), கே.தீபாஜினி (புன்னாலைக் கட்டுவன் றோ.க.த.பா), சி.கோபிகை (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி).

**குண்டு போடுதல்**

பெண்கள்-சி.கோபிகை (சுழிபுரம் விகடோரியாக் கல்லூரி), ஆர்.ஜனரஞ்சனி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஹ.நிறஞ்சனி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

ஆண்கள்-ஜி.துசியந்தன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி), ஜி.மதூசன் (மகாஜனக் கல்லூரி), எம்.விதூஜன் (கிளிநொச்சி மகா வித்தி).

**4x400 மீற்றர் ஓட்டம்**

பெண்கள்-வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், மன்னார் நானாட்டன் மத்திய மகா வித்தியாலயம், மூன்றுமுறிப்பு றோ.க.த.பா.

ஆண்கள்-யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஹாட்லிக் கல்லூரி, வவுனியா விபுலானந்தாக் கல்லூரி.

**17 வயதுப்பிரிவு 110 மீற்றர் தடைதாண்டல**

ஆண்கள்-கி.மொடேன் எல்விஸ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஜி.சனபேர்க் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), டி.றொக்ஸன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**குண்டு போடுதல்**

ஆண்கள்-பி.ஜெயந்தன் (உயிலங்குளம் றோ.க.த.பா), ஆர்.காண்டீபன் (புற்றலம் மகா வித்தி), கே.சிலோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**நீளம் பாய்தல**

ஆண்கள்-வி.ஜஸ்மினன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஜே.நிருசன் (மீசாலை றோ.க.த.பா), ஆர்.அஜந்தன் (யோகபுரம் மகாவித்தியாலயம்).

**முப்பாய்ச்சல**

ஆண்கள் - வி.ஜஸ்மினன் (யாழ்.இந்துக் கல்லூரி), ம.டக்ஸன் (மல்லாகம் மகா வித்தி), ஜி.ஏ.டிலக்ஸன் (மன்னார் நானாட்டான் மத்திய மகா வித்தியாலயம்).

**100 மீற்றர் ஓட்டம**

பெண்கள்-ம.கமலினி (வட்டு மத்திய கல்லூரி), ஆா.மிதிலா (வரணி மகா வித்தி), ம.ரஜித்தா (வவுனியா றம்பைக் குளம் மகளிர் வித்தியாலயம்).

ஆண்கள் - ஆர்.மொடேன் எல்விஸ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எம்.ஜனேசன் (மானிப்பாய் மெமோறியல்), சி.யூட்லஸ் (வயாவிளான் மத்திய மகா வித்தி).

**400 மீற்றர் ஓட்டம்**

ஆண்கள்-ஏ.எட்வின் ஜோய் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஜெ.ஜனந்தன் (மகாஜனக் கல்லூரி), சி.யூட்லஸ் (வயாவிளான் மத்திய மகா வித்தி).

பெண்கள்-சி.யூடிற் ஜெமினி (மன்னார் நானாட்டான் மத்திய மகாவித்தி), ம.கமலினி (வட்டு மத்திய கல்லூரி), எம்.சர்மிகா தேவி (வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயம்).

**4x400 மீற்றர் ஓட்டம்**

பெண்கள்-மன்னார் நானாட்டான் மத்திய மகா வித்தி, மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம், மன்னார் கற்கிடந்த குளம் றோ.க.த.பா.

ஆண்கள்-சென்.ஜோன்ஸ் கல்லூரி, வவுனியா கந்தபுரம் வாணி வித்தியாலயம், மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தி.

**19 வயதுப்பிரிவு நீளம் பாய்தல்**

ஆண்கள்-எல்.சர்மிளன் (வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்), ஏ.நிதர்சன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஜி.கஜந்தன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி).

**4x400 மீற்றர் தடைதாண்டல்**

பெண் - கே.லோகினி (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எஸ்.மேகலை (சென்.லூஸியா மகா வித்தி), சென்.மேரிபிசனா (யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம்)

**100 மீற்றர் தடைதாண்டல்**

ஆண்கள் - எஸ் சிவபாலன் (விக்டோரியாக் கல்லூரி), லகிகரன் (மல்லாவி மத்திய கல்லூரி), எஸ்.கொடுத்தூரன் (கற்கிடந்த குளம் றோ.க.த.பா)

**கோலூன்றிப் பாய்தல்**

ஆண்கள் - ரி.பாலகுமார் (ஹாட்லிக் கல்லூரி), உ.அகிலன் (அருணோதயக் கல்லூரி), எஸ்.கமலன் (ஆண்டான் குளம் றோ.க.த.பா).

**100 மீற்றர் ஓட்டம்**

ஆண்கள் - எல்.சர்மிளன் (வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்), ஆர்.சுஜீவன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ஜி.கஜந்தன் (வவுனியா புதுக்குளம் மகாவிததியாலயம்).

பெண்கள்-எஸ்.சுபர்ணா (இராமநாதன் மகளிர் கல்லூரி), வி.டிலுக்ஸனா (மல்லாவி மத்திய கல்லூரி), எஸ்.பானுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**400 மீற்றர் ஓட்டம்**

பெண்கள்-கே.லேகஜினி (வவுனியா சைவப்பிரகாச வித்தி), இ.ஜக்ஸனா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), வி.தனுசிகா (மன்னார் அல்மினா மகா வித்தி)

ஆண்கள்-எஸ்.சியாம் றோயன் (மன்னார் முருங்கன் மகாவித்தி), ரி.அரவிநதன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), மு.பிரதாபன் (யாழ்ப்பாணம் மத்திய கலலூரி).

**4x400 மீற்றர் ஓட்டம்.**

ஆண்கள் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி, மன்னார் முருங்கன் மகா வித்தி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

பெண்கள் - வவுனியா சைவப்பிரகாச மகா வித்தி, அருணோதயக் கல்லூரி, யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம.

**5000 மீற்றர் ஓட்டம்**

பெண்கள் - ஆர்.காவேரி (அருணோதயக் கல்லூரி), பி.விமலாதேவி (கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்), கே.வபித்தா (கோட்டைகட்டிய குளம் றோ.க.த.பா).

ஆண்கள்-எஸ்.ஜெயசேகரன் (மன்னார் முருங்கன் மகாவித்தி), பி.தயாகரன் (அத்தியார் இந்துக் கல்லூரி), பி.ருகிந்தன் (பூநகரிமகா வித்தியாலயம்).

**21 வயதுப்பிரிவு தட்டெறிதல்**

ஆண்கள் - வி.ஹரிகரன் (ஹாட்லிக் கல்லூரி), பி.டிலான் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ஜே.ஜெனீபன் (வவுனியா புதுக்குளம் மகா வித்தி).

**உயரம் பாய்தல்**

ஆண்கள் - பி.பாலசங்கர் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), ஜே.போல் மார்க் (சென்.அன்னீஸ் மத்திய மகா வித்தி), சி.தர்சன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**100 மீற்றர் ஓட்டம**

ஆண்கள்-வி.லோகேஸ்வரன் (வவுனியா நெடுங்குளம் மகாவித்தியாலயம்), சோ.ஆரோக்கியராஜ் (மன்னார் புனித வளனார் றோ.க.த.பா), எல்.மிதுலன் (கல்மடு மகா வித்தி).

பெண்கள் - கே.சபீனா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எஸ்.ரேகலா (மன்னார் சென்.சேவியர் பெண்கள் பாடசாலை), ஆர்.கௌதமி (இராமநாதன் மகளிர் கல்லூரி).

**200 மீற்றர் ஓட்டம**

பெண்கள் - கே.சபீனா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), எஸ்.ரேகலா (மன்னார் சென்.சேவியர் பெண்கள் பாடசாலை), ஆர்.கௌதமி (இராமநாதன் மகளிர் கல்லூரி).

ஆண்கள் - எஸ்.சிவசங்கர் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), எல்.மிதுலன் (கல்மடு மகாவித்தி), சோ.ஆரோக்கியராஜ் (மன்னார் புனித வளனார் றோ.க.த.பா).

**400 மீற்றர் ஓட்டம்**

ஆண்கள்-ம.பாலராஜ் (வவுனியா புதுக்குளம் மகாவித்தி), ரி.கிருசாந்த் (சங்கானை சைவப்பிரகாச மகாவித்தி), எல்.சதா தேவனேசன் (மன்னார் நானாட்டான் மத்திய மகாவித்தி).

பெண்கள்-ரி.ரேவதி (அருணோதயக் கல்லூரி), ஜே.ஜி.சங்கீதா (பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி), எஸ்.புலோனி (வவுனியா பூந்தோட்ம் மகாவித்தி).

**400 மீற்றர் தடைதாண்டல்**

பெண்கள் - ஜே.ஜி.சங்கீதா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), பி.இராஜசோபனா (யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்), ந.ஜனனி (அருணோதயக் கல்லூரி).

ஆண்கள்-அ.சதாசகாயநாதன் (மனனார் அடம்பன் மத்திய மகா வித்தி), ஜே.செந்தில்குமரன் (சிதம்பராக் கல்லூரி), எஸ்.சுமித்பிரசன்னா (வவுனியா மடுகந்த பெரிய வேளாங்கன்னி).

**குண்டு எறிதல**

ஆண்கள்-ஜி.பிரகாஸ் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), வி.ஹரிகரன் ஹாட்லிக்கல்லூரி), ஜே.ஜெனீபன் (புதுக்குளம் மத்திய மகாவித்தி).

பெண்கள்-எஸ்.ஜனுகா (மன்னார் சித்தி விநாயகர் வித்தி), எஸ்.சுபாஜினி (கல்மடு வித்தியாலயம்), கே.கௌசிகா (வடமராட்சி மத்தி மகளிர் கல்லூரி).

**ஈட்டி எறிதல**

ஆண்கள்-வி.சசீவன் (புத்தூர் சிறி சோமாஸ்கந்தா வித்தி), ரி.கஜேந்திரன் (அனலைதீவு சதாசிவம்), அ.யூட்லின் ராஜ் (மன்னார் முருங்கன் மகா வித்தி).

பெண்கள்-எஸ்.புஸ்பதேவி (வவுனியா புதுக்குளம் மகாவித்தி), து.கவிதா (பூநகரி இந்துக் கல்லூரி), ஜே.சோபிகா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

# வீரவன்ச ராஜினாமாகக் கடிதம்...

ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி விமல் வீரவன்ச தொடர்ந்தும் வீடமைப்பு அமைச்சராகக் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தாய் நாட்டுக்காகத் தான் நடத்தும் போராட்டத்திற்கு அமைச்சர் பதவி தடையாக இருக்குமானால் தான் கைவிட வேண்டியது அமைச்சர் பதவியையே அன்றி போராட்டத்தையல்ல எனவும் அமைச்சர், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள பதவி விலகல் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தாய் நாட்டுக்காகப் போராட்டம் நடத்துவதற்காக வீடமைப்பு நிர்மாணத்துறைப் பொறியியல் சேவை பொது வசதிகள் அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வதாக மரியாதையுடன் அறிவித்துக் கொள்வதாகவும் தனது பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்ளுமாறும் விமல் வீரவன்ச தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

முப்பது வருட யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடிந்தபோதிலும் நாட்டுக்கு எதிரான சூழ்ச்சிகள் இன்னும் முடிவடையவில்லை.

மறைமுகமான திட்டம் ஒன்றின் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை பெற குழுவொன்றை நியமித்துள்ளார்.

நாட்டைப் பாதுகாத்துக் கொடுத்த முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி மற்றும் இராணுவத்தினர் மீது போர்க் குற்றங்களைச் சுமத்தவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது எனவும் விமல் வீரவன்ச தனது பதவி விலகல் கடிதத்தில் மேலும் கூறியுள்ளார். (ச-5)


ஃபமிலி சுப்பர் ஸ்பொட்

சந்தை அருகாமை, மானிப்பாய்

T.P.:- 021 5100169 / 021 7900388

BAHIRA

கோழி இறைச்சி :- 1Kg- 350/=
பன்றி இறைச்சி :- 1Kg- 490/=

பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ரூபாய் 350/= பெறுமதியான கைப்பை இலவசம்.

(C-545)


# ஐ.நா. அலுவலகம் மூடப்பட்டதால் தமிழரே அதிகம் பாதிக்கப்படுவர்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் காரியாலயம் மூடப்பட்டால் தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்படுவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பு அதிகளவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதியில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திக் காரியாலயம் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றது.

இவ்வாறான ஓர் பின்னணியில் பிராந்தியக் கிளை மூடப்பட்டால் அதன் மூலம் தமிழ்ச் சமூகம் அதிகளவில் இழப்புக்களை எதிர்நோக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# கே.பியின் சொத்துக்களை பயன்படுத்தி...

குறித்த சொத்துக்களைப் பயன்படுத்தி பொதுத்துறை ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்த முடியும் என ரணில் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை மக்களுக்கு நிவாரணங்களை வழங்கக் கோரி கிராம மட்டத்தில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டங்களை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. குடும்ப நலனுக்காக அரசியல் அமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ளாது மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசியல் அமைப்புத் திருத்தங்களை கொண்டு வர வலியுறுத்தியும் வரி அறவீடுகளைக் குறைத்து ஊதியத்தை அதிகரிக்குமாறு கோரியும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது அரசாங்கம் கூட்டு அறிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டது.

மனித உரிமை விவகாரம் தொடர்பில் பான் கீ மூனுடன் அரசாங்கம் கூட்டு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தற்போது நிபுணர்கள் குழுவினை நியமித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் 23ம் திகதி இந்தக் கூட்டு அறிக்கை கைச்சாத்திடப்பட்டதாகவும் மனித உரிமைகளைப் பேணுவதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமைக்குப் பூரண ஆதரவளிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்துப் பிரதமர் முறைமை உருவாக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவரையில் வெளிப்படுத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# இலங்கையில் கொடும்பாவி எரிப்பு...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை கூறியுள்ளார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் கொடும்பாவி இலங்கையில் எரிக்கப்பட்ட தினத்துக்கு மறுநாள் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு பான் கீ மூன் சென்று கொண்டிருந்த வழியில் ஊடகவியலாளர்களுக்கு வாழ்த்துக் கூறுவதற்குத் தரித்து நின்றார்.

கொழும்பில் ஐ.நா. பணியாளர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டமை மற்றும் ஐ.நா. அலுவலகம் மூடப்பட்டமை தொடர்பாக அவர் என்ன செய்யப் போகின்றார் என்று இன்னர் சிற்றிப் பிரஸ் அவரிடம் கேட்டது.

பான் கீ மூன் புன்முறுவல் பூத்தார். அவரின் இணைப்பேச்சாளர் குறுக்கிட்டு செயலாளர் நாயகம் பொருத்தமான தருணத்தில் பேசுவார் என்று கூறினார்.

இவ்வாறு நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட இன்னர் சிற்றிப் பிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இன்னர் சிற்றிப் பிரஸின் நிருபர் ரஸல்லீ மத்தியூ மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

ஐ.நா. ஊழியர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். தீவிரமான நடவடிக்கை எடுக்கப் போவதாக பணயம் வைப்பதற்கு தலைமை தாங்கிய அமைச்சர் இப்போது அச்சுறுத்தல் விடுத்து வருகின்றார்.

பான் கீ மூன் பேசுவதற்கு இது பொருத்தமான நேரமாக இல்லையா? சில நிமிடங்கள் கழித்து இதே கேள்வியை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளையிடம் இன்னர் சிற்றிப் பிரஸ் கேட்டது. ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஐ.நா. என்ன செய்ய வேண்டும் என்று அவரிடம் கேட்கப்பட்டது. ஆர்பாட்டங்களில் ஈடுபடுவோரிடம் பேச்சுவார்த்தை நடத்துமாறு அரசாங்கத்தை அவர்கள் கேட்க வேண்டும் என்று நவநீதம்பிள்ளை பதிலளித்தார். (ச-5)

# வீரவன்ச...

வைத்தியர் சிசிர சிரிபெத்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் விமல் வீரவன்சவைப் பல அமைச்சர்கள் நேற்று முன்தினம் இரவு முதல் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

ஹெகலிய ரம்புக்வெல, மேர்வின் சில்வா, சம்பிக்க ரணவக்க மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகிய அமைச்சர்களே விமல் வீரவன்சவைப் பார்வையிட்டுள்ளனர். (ச-5)

# பிரதமர்...

சங்கள் மற்றும் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்கள் ஆகியவற்றைப் பிரதமர் பார்வையிடவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (ச-5)


பதவி வெற்றிடம்

❁ ஓவ்செற் இயந்திர இயக்குநர் (ஆண்கள்)

❁ ஓவ்செற் இயந்திர பயிலுநர்கள் (ஆண்கள்)

❁ பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள், இரவுக் கடமை)

யாழ்.நகரில் இருந்து 6 KM தூரத்திற்குள் வதியும் தகைமையுடையவர்கள் நேரில் வரவும்.

இல.3,இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர், வலம்புரி



உடன் தேவை

❁ கணனி ரைப்பிங்-தமிழ் (Computer Typing)

❁ கணனி பக்கவடிவமைப்பு (PageMaker)

❁ போட்டோ சொப் (Photoshop)

என்பவற்றில் தகைமையுடைய இருபாலாரும் நேரில் வரவும்.

பொது முகாமையாளர், வலம்புரி

இல.3,இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் வீதி ,யாழ்ப்பாணம்.


# ஜனாதிபதி செயலணி...

ஆரம்ப ஆயத்தப் பணிகளை முடித்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், ஜனாதிபதி செயலணியின் அனுமதிக்கு விண்ணப்பித்து விட்டுக் காத்திருக்கின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# ஐ.நாவுக்கு எதிரான...

அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலய வளாகம் முற்றுகையிடப்பட்டுள்ள நிலையில் அந்த சம்பவத்தில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் பங்கு கொண்டுள்ளமையும் வருத்தம் அளிப்பதாக வுள்ளது.

சமாதானமான முறையில் பேரணிகள் நடத்தப்படுவது ஜனநாயக நாடு ஒன்றில் மதிக்கப்பட வேண்டிய விடயம். எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயம் முற்று கையிடப்பட்டதும் அதன் அதிகாரிகளை சமுகமளிக்க முடியாதவாறு தடை ஏற்படுத்தப் பட்டதும் கண்டனத்துக்குரிய விடயம்.

இந்தச் செயற்பாடு சர்வதேச ரீதியாக இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் செயல் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்களுக்கும் காரியாலய பிரதேசத்தினதும் பாதுகாப்புத் தொடர்பில் இந்த நாடுகள் அரசாங்கத்திடம் வலியுறுத்தல் விடுத்துள்ளன.

இதேவேளை எதிர்வரும் திங்கட்கிழமை இந்த விடயம் குறித்து தமக்கும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ள தாக அந்த அறிக்கையில் இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ச-5)


ஐடியல் அக்கடமி

| சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | இடைப்பிட்டி, காரைநகர் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய் |
|---|---|---|---|

எமது நான்கு கல்வி நிறுவனங்களிலும் 2 ஆம் தவணைப் பரீட்சைகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 8 மணிக்கு ஆரம்பமாகின்றது என அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- எமது வினாத்தாள்களைப் பெற விரும்புகின்ற மாணவர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் குடாநாட்டில் உள்ள அனைத்து புத்தகசாலைகளிலும் அல்லது எமது நான்கு கல்வி நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என்பதனை அறியத் தருகின்றோம்.

(C-622) - நிர்வாகி



100% Discount

CIMA UK




Call 772395895

CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம் (Listed College), பரீட்சை நிலையம்

MCS இல் CIMA அனைத்து கற்கை பிரிவுகளும்.

எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரிப்பரீட்சைகள்

MCS

Job Gurantee Skill Migration, Australia,Canda,UK

*Free Courses - ICDL, Diploma in English (Duration 02-06 Months)

Supported By UNDP/JRRP

324, பல்கலைக்கழக சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (C-621)



NEC இன்று முதல்

NEC கல்வி நிலையம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தியில் (நாவலர் கல்வி நிலையத்திற்கு அருகில்)

A/L கலை, வர்த்தக, கணித,உயிரியல் பிரிவுகளுக்கான கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்கின்றது.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.